1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS, JAFFNA
phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 15-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

கடந்தசிலதினங்களாய் அகோரமாக வெயிலெறித்துவந்து சென்றஇருதினங்களிலும் காணப்படும் மப்புமந்தாரத்தாலே சாந்தியேற்பட்டது. இன்று காலை பெருமுழக்கம், மின்னலுடன் ஒருபாட்டம் சிறுமழை பெய்யலாயிற்று.

### கவர்னர்-ஜெனறலின் தந்தை

இலங்கையின் புதியகவர்னர்-ஜெனறலான சேர் ஒலிவர் குணதிலகஅவர்களின் தந்தையாரான திரு. ஏ. ஈ. குணதிலக அவர்கள் இன்னமும் சீவந்தராய் இருக்கின்றார். முன்னர் திரிகோணமலைப் போஸ்ற்மாஸ்றராயிருந்த இவர் சென்ற 18-ந் திகதி தமது 92-வது பிறந்தபெருநாளைக் கண்டுகளித்தார். திரிகோணமலையில் போஸ்ற் மாஸ்றராய் இருந்துவரும்போது 1892-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 22-ந்திகதியன்று சேர் ஒலிவர் குணதிலகபிறந்தார். எட்டுப்பிள்ளைகளைக்கொண்ட குடும்பத்தில் நான்காவதாகப்பிறந்த இவர் ஒருவர்மட்டும் ஆண்பிள்ளையாவர். இவரின் தாயார் 1948-ம் ஆண்டு தனது 85-ம் வயதில் காலஞ்சென்றார்.

### யாழ்ப்பாண நூல்நிலையம்

யாழ்ப்பாண மத்தியநூல்நிலைய கட்டடநிதிக்கென்று 22,000 டலர் அதாவது, 1,04,500 ரூபா நன்கொடையளிக்கச் சுதந்திரஆசியகமிற்றி தீர்மானித்திருக்கிறது இதுவரை அளிக்கப்பட்டுள்ள தனிப்பட்டநன்கொடைகளில் இதுவே மிகப்பெரிய தொகையாகும். இந்தநூல்நிலையத்தைக் கட்டிமுடிக்கப் பத்துலட்சம்ரூபா செலவேற்படுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது இதுவரை நன்கொடையாக இரண்டு லட்சம்ரூபாவுக்குமேல் சேர்ந்திருக்கிறது.

### பத்துநாள் பட்டினிவிரதம்

காங்கேசன்துறை ஆசினர்சிமெந்துத் தொழிற்சாலையிலே முன்னர்வேலைசெய்த எஸ். சுப்பிரமணியம், என். சின்னத்துரை, ஏ. வைத்தியலிங்கம்,பி. கந்தையாஎனும் தொழிலாளிகள் நால்வரும் தொழிற்சாலைமனேஜர் தங்களை வேலையிலிருந்து தள்ளிவிட்டதை ஆட்சேபித்தும்; திரும்பவும்புதிதாக விசாரணைநடத்த வேண்டும்; அதுவரைதங்களை வேலையில் அமர்த்தவேண்டுமெனக் கேட்டும்வந்து கடைசியாகத் தங்கள்மனுவொன்றையேற்கத் தொழிற்சாலைமனேஜர் மறுத்ததிலிருந்து இம்மாதம் 10-ந்திகதிமுதல் பட்டினிவிரதம் அனுட்டித்து வருகின்றனர். பத்துத் தினங்களுக்குப்பின் சென்றதிங்கட்கிழமைவரையிலே சின்னத்துரை, வைத்தியலிங்கம்என்பவர்களின்நிலைமை அபாயகரமாயிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வண. தனிநாயகம்சுவாமிகள்

இலங்கைச் சர்வகலாசாலையிலே கல்விப்பகுதிப் போதகாசிரியர் வண. சேவியர் தனிநாயகம் சுவாமியவர்கள் கிறீற்தீவிலுள்ள மினோவன்எனப்படும் புராதனநாகரீகத்தை ஆராய்ச்சிசெய்வதற்கெனச் சென்றவாரம் அத்தீவுக்குப் பிரயாணமாயினர். ஐரோப்பாவிலே தங்கியிருக்கும் மூன்றுமாதகாலத்திலும் சுவாமியவர்கள் கல்விசம்பந்தமான பயிற்சிபெறுவது மாத்திரமல்ல, ஆனால், பழைய தமிழ்க் கையெழுத்து நூல்களைக் கண்டறிவதற்காக இத்தாலியிலும், போர்த்துக்காலிலுமுள்ள நூல்நிலையங்களைப் புரட்டிஆராயலாமென்றும் நம்புகின்றார். சுவாமிதனிநாயகம்அவர்கள் மூன்றுமாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் "தமிழ்க் கலாசாரம்" என்ற சஞ்சிகையொன்றையும் வெளியிட்டுவருகின்றார். இது பலநாடுகளிலுள்ள கல்விமான்களிடையே பரந்திருக்கிறது. தமது சுற்றுப்பிரயாணத்தின்போது அவர் இங்கிலாந்திலும், ஏனையஐரோப்பிய நாடுகளிலுமுள்ள திராவிடபண்டிதர்களிடையே தம்முடன் தொடர்பூண்டார்சிலரைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தையும் கண்டுகொள்ளவிருக்கின்றார்.

### மகாராணியாரும் நீச்சல்வீரரும்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் தமது அதிகாரபூர்வமான "ரெம்பிள் ட்றீஸ்" வாசஸ்தலத்தில் சென்ற 11-ந்திகதிஇரவு மகாராணியாருக்கு அளித்த தோட்டோபசாரணையின்போது, சமீபத்திலே பாக்குநீரிணையை வீரத்துவமாக நீந்திக்கடந்து வாகைமாலைசூடிய திரு. எம். நவரத்தினசாமி அவர்களை அவருக்கு அறிமுகஞ்செய்துவைத்தார். மகாராணியார் சிறிதுவேளை நீச்சல்வீரருடன் சம்பாஷித்தார். பின்னர் எடின்பறோ கோமகனாரும் அவரது மகத்தான தீரத்தைப் பாராட்டி மிகுந்தஆர்வத்துடன் அவருடன் சிறிதுநேரம் சம்பாஷித்தார். ஆங்கிலேயகால்வாயையும் அவர்நீந்திச்செல்ல ஏன் முயற்சிக்கப்படாதென்று மகாராணியார்கேட்டபோது, தாம் மற்றுமோர்தரம் இந்தியகரைக்கு நீந்திச்சென்று, உடனே தானே மீண்டும்அங்கிருந்து ஒரேமூச்சில் இலங்கைக்கரைக்குத் திரும்பவும் நீந்திவர முயற்சிக்கப் போவதாயும், அதன்பின்னரே ஆங்கிலேயகால்வாயை நீந்திச்செல்வதைப்பற்றி ஆலோசிக்கப் போவதாகவும் பதிலளித்தார்.

### புதிய சமாதானநீதிபதி

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டுச் சக்கிடுத்தாரும், உடுவிலிலே "இரத்தின வாச" எனும் கிருகத்தில் வசிப்பவருமான திரு. கே. ஏ செபஸ்ரியன் அவர்கள் யாழ்ப்பாண நீதிப்பரிபாலன டிஸ்திறிக்முழுவதற்கும் ஜே. பி. எனப்படும் சமாதானநீதிபதியாக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார்.

## அர்ச். சூசையப்பர்பந்தி

யாழ்ப்பாணம், சென் வின்சென்ற் டீ போல்சபை அர்ச். சூசையப்பர் பந்தியின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 25-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்குச் சென் சாள்ஸ் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடந்தேறும் ஆசனக்கோவிற் கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேம்ஸ் சுவாமியவர்கள் கூட்டத்திற்குத் தலைமைவகிப்பார். அவ்வேளை சென் வின்சென்ற் டீ போல் சபையை அடியிட்டவரான பிறடெறிக் ஓசானம் அவர்களைப்பற்றி வண. எஸ். ஏ. மைக்கல் சுவாமியார் ஓர்சொற்பொழிவாற்றுவர். பந்தியின் உபகாரிகளும், அபிமானிகளும் அவ்வேளை திரளாகச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

### மகாராணியாரின் பிள்ளைகள்

எலிசபேத்மகாராணியாரின் பிள்ளைகளான சாள்ஸ்இளவரசரும், ஆன் இளவரசியும் தங்கள்பெற்றோரை எதிர்கொண்டுவந்து சந்தித்து அழைத்துப் போகுமாறு போட்ஸ்மத் துறைமுகத்திலிருந்து சென்ற 14-ந்திகதி புதன்கிழமை 'பிறிற்றனியா' எனும் இராச உல்லாசப் பிரயாணக்கப்பலிலே ரோபிறக் துறைமுகத்தைநோக்கிப் புறப்பட்டிருக்கின்றனர். இவர்கள் ஏறக்குறைய ஆறுமாதகாலம் தங்கள்பெற்றோரை விட்டுப் பிரிந்திருந்தபிறகு அடுத்தவைகாசிமாதம் 1-ந்திகதியன்று ரோபிறக்கிலே அவர்களைத் திரும்பவும்சந்தித்து அவர்களுடன் லண்டன்நகர் செல்வார்கள்.

### எம். பி. களின் கிறிக்கெற்போட்டி

இந்தியபாராளுமன்ற பிரதிநிதிகளைக் கொண்ட கிறிக்கெற்கோஷ்டி ஒன்று விரைவிலே கொழும்புக்குவந்து இலங்கைப்பாராளுமன்றப் பிரதிநிதிகள் கோஷ்டி ஒன்றுடன் கிறிக்கெற்விளையாட்டுப் போட்டிஒன்று நடத்துதற்கான பயிற்சிபெற்று வருகின்றது. தற்போது செய்யப்பட்டுள்ளஒழுங்குகள் சரிவரநடைபெற்றால் இந்திய கிறிக்கெற்கோஷ்டி இன்னும் ஓர்வாரத்தில் இலங்கைவந்து சேருமெனத் தெரிய வருகிறது.

### இடியால் நேர்ந்த மரணம்

உடுவிலைச்சேர்ந்த ஆறுப்பிள்ளை சின்னத்துரை, கதிரன்கணபதி எனும் இருவரும் சென்ற புதுவருடப்பிறப்பன்றுகாலை முதன்முதலாக வயலில் வேலைசெய்யச் சென்றிருந்தபோது, அங்கு திடீரென ஓர்தென்னமரத்தில் விழுந்தஇடியேற்றின் அதிர்ச்சியால் தாக்குண்டு கீழேவிழுந்து ஒருங்கே மரணமடைந்தனர். மரணவிசாரணையின்பின்னரும் அவ்வாறே தீர்ப்பளிக்கப்பட்டது. அன்று வவுனியாவைச் சேர்ந்த மகாகச்சகோடிஎனும் கிராமத்தில் விழுந்தஓர்இடியினால் ஏழு எருமைகள் ஒருங்கேமாண்டன.

## மந்திரியாரின் ஆட்சேபம்

எலிசபேத்மகாராணியார் பாராளுமன்றத்தைத் திறந்துவைத்தபோது, அவருக்கு நன்றிகூறும்முகமாகச் சனப்பிரதிநிதிகள்சபை முதல்வர் ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமாகஇருந்தது. தமிழ் கைவிடப்பட்டிருந்தது. இவ்விதம் தமிழ் கைவிடப்படக் காரணம்என்னவென்று தபால்-தகவல்மந்திரியார் எஸ். நடேசன்அவர்கள் ஆட்சேபம்தெரிவித்திருந்தார். இந்தஆட்சேபத்தைப்பற்றி அரசாங்கம்சமீபத்தில் ஆலோசிக்க விருக்கிறதென்றும், பிரதமர் அதுபற்றி ஓர் அறிக்கை வெளியிடுவாரென்றும் தற்போது தெரியவருகிறது.

### தலைசிறந்த வரவேற்பு

எலிசபேத் மகாராணியாருக்குக் கொழும்புநகர் அளித்த வரவேற்பே அவரது சுற்றுப்பிரயாணமுழுவதிலும் அளிக்கப்பட்டவற்றிலெல்லாம் மகா சிறந்ததென்பது அவர்பிரயாணஞ்செய்யும 'கோதிக்' என்ற கப்பல்மாலுமிகளுள் அநேகரின் கருத்தாகும். "இலங்கையைப்பற்றி நாங்கள் கேள்விப்பட்டதிலிருந்து இங்கே யாதும் வரவேற்பு நடக்குமா, இல்லையாஎன்ற சந்தேகஉணர்ச்சியுடனேதான் நாங்கள் இங்குவந்தோம்; ஆனால், துறைமுகமேடையிலே மகாராணியார்பெற்ற வரவேற்பானது நாங்கள்கொண்ட சந்தேகங்களையெல்லாம் போக்கிவிட்டது; இலங்கையில் சனக்கூட்டங்கள் மிகஒழுங்காய் நடந்துகொண்டதாக நாங்கள் எண்ணுகிறோம்; சனத்தொகையும் அரசசுற்றுப்பிரயாணத்திலே ஏனையநாடுகளில் நாங்கள்கண்ட எதிலும் மேம்பட்டுவிட்டது" என்று கப்பல்அதிகாரிகளில் ஒருவர்கூறியிருக்கின்றார்.

### மரவரிக்கம்மிற்றி விசாரணை

யாழ்ப்பாணத்திலே மரவரித்திட்ட நடைமுறைபற்றி விசாரணைசெய்வதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள விசேஷ கம்மிற்றியானது யாழ்ப்பாண நகர மண்டபத்திலே நகரசபைக்கம்மிற்றிச் சாலையில் இம்மாதம் 23-ம், 24-ம் திகதிகளிலும், அடுத்தவைகாசிமாதம் 2-ந் திகதியன்றும்கூடி விசாரணை நடத்தவிருக்கின்றது. இடையிலே இம்மாதம் 25-ந் திகதி வட்டுக்கோட்டையிலுள்ள சங்கானைக் கிராமக்கோட்டிலும், 26-ந் திகதி ஊர்காவற்றுறைச் சனசமூகநிலையத்திலும், 27-ந் திகதி காங்கேசன்துறை வாடிவீட்டிலும், 27-ந் திகதி பருத்தித்துறை வாடிவீட்டிலும், 28-ந் திகதியும் 29-ந் திகதியும் அச்சுவேலி—நீர்வேலிக் கூட்டுறவு வாழைக்குலை விற்பனவுச்சங்க கட்டடத்திலும், வைகாசி 1-ந் திகதி சாவகச்சேரி அரசினர் ஐூனியர் பெண்கள்பாடசாலையிலும்கூடி விசாரணை நடத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வாழ்வு

(லா. ப. கோஸ்தா)

கொடியவன் அவன் குறும்புசெய்வதில். ஆகவே, அவனைப்பற்றி எவருக்கும்தெரியாமல்இருக்காது. இருக்கவும் முடியாது. அவனை வீட்டிலே அடக்கவில்லை. ஆனால், அடக்க முடியாததினால் அல்ல; செல்லத்தினால். அத்தோடு நெடுநாள் தவம்கிடந்துபெற்ற புதல்வன்என்று. அன்றியும் செல்லத்தோடுசெல்வமும்சேரவே, மற்றெவரும் கண்டிக்கமுன்வரவில்லை. ஏன்? பணக்காரர் பலதும்செய்ய நேரிடுமேஎன்று.

இந்தநிலையில் அவன் வளர்ந்தான். வளர்ந்துகொண்டே இருந்தான். வாலிபப்பிராயமும் அடைந்துவிட்டான். அத்துடன் காலித்தனமும் அவனிலே வளர்ந்துவிட்டது பிறர்அறியாத முறையில். ஆனால், அவனை அடுத்துப் பழகியவருக்குமட்டும் தெரியும், அவன் அகங்காரமாய்ச் செய்யாதது ஒன்றுமே இல்லைஎன்று. ஏன்? அவன் கூட அதைச்சொல்வதற்குக் கூச்சப்பட்டது கிடையாது. ஆம், கூச்சம்என்பதுதான் அவனிடம் இல்லையே. அட்டகாசவெள்ளத்திலே அவன் அரட்டை அடித்துக்கொண்டிருந்தான். நண்பர்களின் இச்சகபேச்சுப்படகிலே மிதந்துகொண்டு, பணத்தூண்டிலால் பாவையரைச்சிக்க வைத்துச் சிரித்துமகிழ்ந்தான் அவன்.

அங்ஙனம் மகிழ்ந்தநிலையிலே நிகழ்ந்த சம்பவம்ஒன்று அவனுடைய ஆனந்தவாழ்க்கைக்கு ஓர்வீழ்ச்சியைத் தந்தது. அன்றுமுதல் புகழ்மாலை அவன்மேல் குவிந்துகொண்டே இருந்தது. பெருமைக்காற்று அவன்மேல் பெருமிதத்துடன்வீசிற்று. ஆடாதமயில் அவனைப்பார்த்து ஆடிற்று. பாடாதகுயில் அவனைநோக்கிப் பாடிற்று. அதற்கெல்லாம் காரணங்கள் அடுக்கிக்கொண்டே போகலாம் அழகாக. ஆனால், என்றோஒருநாள் அச்சம்பவம் நிகழ்ந்ததிலிருந்து அவனைத் தூற்றியவர்களெல்லாம் போற்ற ஆரம்பித்து விட்டார்கள்என்றால், அந்தப்பெருமைஎல்லாம் அவள் செல்விக்கே உரியதெனலாம். ஓர்நாள் ...

"அத்தான், அத்......"

"என்செல்வி! வாசலில் வரும்போதே உன்வாயைக் காட்டவேண்டுமா அத்தனைபெரிதென்று?"

"வாயைக் காட்டவேண்டும் என்பதற்காக நான் வரவில்லை அத்தான்! வளமையைக் காட்டவந்தேன்; சேற்றிலே செந்தாமரையைக் காட்ட...!"

"அம்மம்மா! எது வசனம் அனலாய்க் கக்குகிறதே!"

"அத்தான்! அந்தஅனலை உங்கள் இதயத்தில் கொட்டவே ஓடோடிவந்தேன், நீண்டவழிதேடித் தன்னந்தனியே. என்தெரியுமா? கேள்விப்பட்டேன் உங்களைப்பற்றி; ஆனால், பெருமையாய் அல்ல, சிறுமையாய். அதுதான் கூசாது சொல்லிவிடுகிறேன் நான் கேள்விப்பட்டதை — அத்தான் அயோக்கியன்என்று. ஆம், அத்தான்! கழிந்தகால வாழ்க்கைஏட்டைப் புரட்டிப்பாருங்கள்! அங்கே நீங்கள்பண்ணிய அட்டகாசத்தை ஆராய்ந்து பாருங்கள்! போதாக்குறைக்கு இப்போது நீங்கள் பெற்றதாயையே — பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த அன்னையையே எதிர்த்துப் பேசத் துணிந்துவிட்டீர்கள்! இவையெல்லாம் போதாதென்று கற்புக்காகத் தங்கள்உயிரையே மாய்த்தவர்களது மண்ணில்பிறந்தநீங்கள் என்ன முறையில் நடந்துகொள்ளுகிறீர்கள்? நேர்மையின் பெயராலே, நியாய நீதியின்பெயராலே உள்ளதைச்சொல்லுங்கள் அத்தான்!"

"செல்வி!"

"அத்தான்!"

"மணவாழ்க்கை நிச்சயித்தபின் எனதுவருங்கால வாழ்க்கைத்துணைவி நீதான்என்பதை மறந்துவிட்டாயா?"

"நிச்சயித்தாலும் இன்னுமே என்னால் மறுக்கமுடியும்என்பதை மறந்துவிடவேண்டாம்அத்தான்! ஆனால், அதற்குள் உங்கள்வாழ்வுஓலையை வாசிக்கவேவந்தேன். நீங்கள் உங்கள் வாழ்க்கையைத் திருத்துவேன்என்று வாக்களிக்காவிட்டால் என்னை வாழ்க்கைத் துணைவியாகக் காணமுடியாது என்பதைக் கூறவேவந்தேன். அத்தான்! நான்ஏழைதான். அதை மறுக்கவில்லை. மறைக்கவும் இல்லை. ஆனால், அதேநேரத்தில் எனக்கு மானம்மரியாதை உண்டுஎன்பதை நீங்கள் உணரவேண்டும்" என்பது செல்வியின் உரைகள்.

"செல்வி! உணர்ந்தேன்; உணர்ந்துவிட்டேன்; மீண்டும் கிளர்ச்சிஊட்டாதே. என்றுநான் பைபிளைப்பார்த்தேனோ, அன்றுமுதல் நான் நல்லவனாகிவிட்டேன்; ஆம்செல்வி, ஆமாம், இந்தப்புதுவருடத்திலிருந்து புதுமனிதன்நான்; அதைக்காட்டவே அத்தைமகளை ஏழையாய்இருந்தாலும், ஏழைஉள்ளம் உள்ளவளைக் கட்டவேண்டுமென்று தீர்மானம்செய்தேன்; அதன் முடிவேஇது" என்று அன்புற்றமுறையில் அவன்கூறினான்.

"அத்தான்செல்வமா இப்படிப்பேசுவது? புரட்சிச் சிங்கத்தினிடமிருந்தா நான்இப்படி மறுமலர்ச்சியின் மழலை மணிமொழிகளைக் கேட்கிறேன்; ஆச்சரியமாய் இருக்கிறதே அத்தான்" என்று கொஞ்சலாகக்கேட்டாள்அவள்.

"மறுமலர்ச்சிக்குக்காரணம் நானல்லச்செல்வி; அதற்குப் புகலிடமாயிருந்த பைபிளைப்பார்த்தேன்; என்னை மாற்றியது பைபிள்தான். அதனை முதலில் படித்தவளாகியநீ ஆராய்ந்துபார்; அதன்பின் உன்முடிவைக்கூறு."

"அத்தான், ஆச்சரியமாகவே இருக்கே! நான்கண்டமுடிவையே நீங்களும் கண்டிருக்கிறீர்கள்; அந்த முடிவின் காரணமாகவே நான் வந்தேன்; ஆனால், நீங்களே அதற்குமுன் திருந்திஇருக்கிறீர்களே......"

"செல்வி, நீயோ சொல்லின்செல்வி; என்னைத்திருத்தவேண்டிய முறைகளெல்லாம் சொல்; கேட்கத்தயார்."

"இதோபாருங்கள்; அதற்குள்ளே இந்த வர்ணனைகளெல்லாம் என்ன? கொஞ்சம்பொறுங்கள்! அத்தான் நான்உங்களைமணக்கமாட்டேன்; கன்னியர்மடஞ்சென்று ஆங்கு ஓர்பணிப்பெண்ணாகவேண்டும்......"

"தாராளமாய்ச் செல்வி! போ; அங்குபோய் நன்றாய்இரு; எனக்காக — இந்தப்பாவிக்காகவும் மன்றாடு."

"ஐயோ! இதுதான் இந்தஆண்களுக்கு அவசரபுத்திமட்டும் போகாது; கேளுங்கள், சொல்லுகிறேன்: உங்களிடம் என்எண்ணத்தைச் சொல்லித் திருத்தவேண்டும்; மறுத்தால் ஏழையாகியநான் ஓர்கன்னியர்மடஞ்சென்று காலத்தைக் கழிக்கவேண்டும் என்றிருந்தேன்; ஆனால், எனக்குமுன் நீங்களேமனம் மாறி விட்டீர்கள். அதற்கெல்லாம்காரணம், அந்தநல்லசுவாமிகள்என்றுதான் நினைக்கிறேன். எனவே, இந்தநிலையில் உங்களைவிட்டுவிட்டால் பழையபடியும் கெட்டுப்போய்விடுவீர்கள்; ஆகையால், உங்களையே மணக்கவிரும்புகிறேன்; உங்கள் நிலையையும் கூறிவிட்டால் நன்றாய் இருக்கும் என்றே எண்ணுகிறேன்" என்று நயந்தாள்செல்வி.

"செல்வி! நீஎன்னை மன்னித்துவிடு முதலில்; பாவிதான் நான்என்று தெரிந்திருந்தும் மணக்கத் துணிந்த உன்னைநான் மணந்தால் என்பாக்கியம் தான்என்று சொல்லவும்வேண்டுமா?" என்றான்செல்வன்.

"அத்தான்! இப்போதுநாம் புதுக் கிறீஸ்தவர்கள்; பைபிளைப்படித்ததினால் வாழ்விலும் புதுமணம்..... என்ன அத்தான், மௌனம்சாதிக்கிறீர்களே......"

"இல்லைச்செல்வி! ஆண்டவனின் திருவருளைநினைந்து ஆழமாகச் சிந்தித்தபடியால்தான் [illegible]."

## தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

### களிகூர்ந்தகாரணிக்கம்

### 4-ம் காரணிக்கம் — 5-ம் பிரியதத்தம்

### 35. முனிவர் வருகை

வரிவேதமுறைப்படி தேவாராதனைகள்நடத்தத் தேவாலயத்தில் யூத குருமுனிவர்சபை கூடியிருந்தது. அந்த முனிவர் சபைக்கெல்லாம் மூத்தோனாய், இராசகுருப்பிரசாதியாக விளங்கியிருந்தார் சிமியோன் முனிவர். அவர்மிகவும்வயதுசாய்ந்தவர். தெய்வப்பற்றுமிகுந்தவர். நீதிமானாகத் திகழ்ந்தவர்.

இந்தமகாமுனிவரே சூசைமாதவனுக்கும், கன்னிமரியம்மாளுக்கும் அப்போது இந்தத் தேவாலயத்திலே திருமணம் நிறைவேற்றிவைத்தார். அப்போதுஅவர்:

"வான்-வேந்தன்உமதிரி தாயமுறைஉரு
மேவிவரவெனும் ஆசியோ(டு)"

அதாவது,வானுலகவேந்தனாகிய கடவுள் மனிதனாக உங்கள் சொந்தக் கோத்திரத்தின் வழியாய் அவதாரஞ் செய்துவரக்கடவதென்று ஆசீர்வதித்து இவர்களின் திருமணத்தை நிறைவேற்றிவைத்தார்.

அங்ஙனமாக, இஸ்றாயேலின் தேற்றாவுக்கு எதிர்பார்க்கிறவரா யிருந்த அவர் தினந்தோறும்:

"உணங்கிய மரத்திற்(கு) ஆர்ந்த
உயிர்வரு மாரி போன்றும்..."

காய்ந்துவாடின (உணங்கிய) மரத்திற்குப் பொருந்திய (ஆர்ந்த) உயிராக வரும் மழையைப்போலும்,

"இணங்கிய இருளைச் சீக்கும்
இரவியே போன்றும்..."

உலகத்தை மூடின (இணங்கிய) இருளை நீக்கவரும் (சீக்கும்) சூரியனைப் போலும்,

"..........................நாதன்
பிணங்கிய வினைகள் தீர்ப்பப்
பிறந்(து)இவண் மனுவாய்க் காண
வணங்கிய முனிவன் நாளும்
வரம்தர வேண்டு வானே"

நம்மோடு பிணைந்து நெருங்கிய பாவவினைகளை (பிணங்கிய வினைகள்) தீர்த்துஇரட்சிக்கும்படி உலகநாதனாகிய கடவுள் அவதரித்து மனுமகனாகப் பிறந்தபோது இங்கே அத்திருமகனைத் தன்கண்களால் காணும்படி, அதுவரை உயிரோடிருக்கத் தனக்கு வரந்தரவேண்டுமென்று நாள்தோறும் வணக்கத்தோடு பிரார்த்தித்து வருவான்.

இவ்வாறு சிமியோன் முனிவர் பிரார்த்தித்து வருநாளில் ஓர்நாள் இறைவன் அம்முனிவருக்குத் தரிசனையாகி:

"வம்(பு)அலர்ச் சுனையின் நீருள்
வலம்புரி பிறத்தல் போன்றும்"

கடலிலே பிறக்கத்தக்க வலம்புரிச் சங்கு அவ்வியல்புநீங்கி வாசனையுள்ள மலர்களையுடைய (வம்பலர்) தடாகத்து நீரில் பிறப்பதுபோலும்,

"கொம்(பு)அலர்த் தருவின் உச்சி
குவளையே பூத்தல் போன்றும்"

தடாகத்திலே மலரத்தக்க நீலோற்பலமலர்(குவளை)அவ்வியல்புநீங்கி அடிபரந்த (அலர்) மரக்கிளையின் உச்சியிலே (தருகொம்புஉச்சி) மலர்வதுபோலும்,

"அம்(பு)அலர்க் கன்னி விள்ளா(து)
அளித்தோர் மகவாய் நாதன்
கம்(பு)அலர்க் கண்கள் பூப்பக்
காண்பையென்(று) இறைவன்
சொன்னான்"

தாமரைமலரை ஒத்த (அம்பு அலர்) கன்னித்தாயின் கன்னிமைமலராமல் (விள்ளாது) கணவன் துணையில்லாது அற்புதமாகப் பெற்றெடுக்கப்பட்டதான ஒருபிள்ளையாய்ப் பிறக்கும் (ஓர்மகவாய்) நாதனை கொம்பிற்பூத்த (கம்பு அலர்) மலர்போல உன்கண்கள்மலர (கண்கள்பூப்ப) நீ மரணமடையுமுன் காண்பாய் என்று திருவுளம்பற்றியிருந்தார்.

"நம்பிய இன்ன வாய்மை
நல்லுயி ராக நின்றான்"

ஆண்டவன் அருளிய இச்சத்திய வாக்கை நம்பியதையே தனது நல்லுயிராகக்கொண்டு நெடுநாள் சாகாதிருந்த சிமியோன்முனிவர் தாம் — மரிக்குமுன் தமதுகண்களால் உலகஇரட்சகரைக் கண்டுகொள்ள வேண்டுமென்ற பேராவல்மிக்காராய், தினமும் தேவாலயஞ்சென்று ஆங்கே மணிக்கணக்காகச் செபஞ்செய்துவரும்போது ஓர்நாள்அவர் ஒருநாளுமில்லாதவகையாக ஓர்காட்சியைக் காணுகிறார். அதாவது:

அம்பிய மலரின் சாயல்
அவதரித்(து) உதித்த நாதன்
கொம்பிய வினைகள் தீர்ப்பக் [னப்
கோயிலவந்(து) அடைந்தான் என்
பம்பிய காட்சி தோன்றிப்
பறந்தென அன்று வந்தான்."

தாமரைமலரின் சாயலாக (அம்பிய மலரின்சாயல்) மனுமகனாய் அவதரித்துப்பிறந்த தேவபாலகன் கோபத்தோடு (கொம்பிய) வருத்தும் பாவவினைகளைத் தீர்த்துஇரட்சிக்கும்படி தேவாலயத்தில்வந்து சேர்ந்தானென்று நிறைந்து உயர்ந்த ஓர் (பம்பிய) காட்சியினால் அறிந்து பறந்துவந்தாற்போலத் தேவாலயத்தைநோக்கி அன்றையத்தினம் வந்துசேர்கிறான்.

சூசைமாதவனும், தேவதாயாரும் ஆலயம்வந்தடைந்த அதேசமயத்தில் முனிவரான சிமியோனும் ஆங்குசென்றடைகின்றார். இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதல் அவருக்குக்கிடைத்து, உடனே அதற்குக் கீழ்ப்படிந்தே அங்கு சென்றடைகின்றார்.

"வாய்மையோர் புகுங்கால் கோயில்
வணக்குரி பணியில் வைகும்
தூய்மையோ ரனவுட் கோட்டம்
துறந்தனர் அவையின் மூத்தோன்
மேய்மையோ(டு) உயர்ந்த வேத
மேற்படர் கொழுகொம்(பு) அன்னான்
சீய்மையோன் என்னும் வாய்ந்த
சீர்கெழு முனியும் வந்தான்."

மாட்சிமையுடைய சூசைமாதவன், தேவதாயார், திவ்வியபாலகன் ஆகிய மூவரும் (வாய்மையோர்) ஆலயத்தில் புகுந்தபோது, அவ்வாலயத் திருப்பணியிலே ஈடுபட்டிருக்கும் (வைகும்) தூயவர்களாகிய மனக்களங்கத்தைப்போக்கிய முனிவர்சபைக்கெல்லாம் (உள் கோட்டம் துறந்தனர் அவையின்) தலைவனும், கருத்திற்குயர்ந்த (மேய்மையோடுஉயர்ந்த) வேதநூலாகியஒரு பூங்கொடி மேலேபடரும்படிவைத்த கொழுகொம்பை ஒத்தவனுமான சீமையோனென்னும் நிறைந்த மாட்சிமையுள்ள முனிவனும் வந்தான்.

"அப்பொழுது, இதோ எருசலேமில் சிமையோன்என்னும் பேருள்ள ஓர்மனிதன் இருந்தார். அந்த மனிதன் நீதிமானுமாய், பயபக்தியுடையவருமாய், இஸ்றாயேலின் தேற்றாவுக்கு எதிர்பார்க்கிறவருமாய் இருந்தார். இஸ்பிரீத்துவானவரும் அவரிடத்தில் இருந்தார். அன்றியும் தாம் ஆண்டவருடைய கிறீஸ்துவைக் காண்பதற்கு முன்னே சாவைக் காண்பதில்லையென்று அவர் இஸ்பிரீத்துசாந்துவினால் வாக்குப்பெற்றிருந்தார். அப்படியிருக்க, அவர் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவலால் தேவாலயத்துக்கு வந்தார்." —லூக். II 25—27.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைக்குப் பாராட்டுரை

மதுரை அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய ஜே. பி. லெயோனட் ஆண்டவர் அவர்கள் அதிமேற்றிராணித் துவபதவிக்கு உயர்த்தப்பட்டபின் முதன்முறையாகச் சென்ற பங்குனிமாதம் 28-ந் திகதியன்று காரைக்குடிக்கு விஜயஞ்செய்தனர். அங்கே அவருக்குநடத்தப்பெற்ற பெருமிதமான வரவேற்புஉபசார விழாவிற்கு டக்றர் அழகப்ப செட்டியார், எம். ஏ., டி. எல் ஐரிரி.; எல். எல். டி. பரிஸ்றர் அவர்கள் தலைமைவகித்து நிகழ்த்திய சிறந்தசொற்பொழிவிலே—அகில முழுவதிலும் மனித சுகசேமவாழ்க்கையின் சகலதுறைகளிலும் கத்தோலிக்கதிருச்சபை ஆற்றிவருகின்ற ஆச்சரியகரமான தொண்டுக்குச் சிறந்தபாராட்டுரைவழங்கி, உலகமுழுவதிலுமேசுற்றிப் பிரயாணஞ்செய்துள்ள ஒருவரென்றமட்டில் தாமேஅதற்குச் சுயமாகச் சாட்சியம் அளிக்கமுடியுமெனக் கூறினின்றார். தான் தற்போது அடைந்திருக்கும் சிறந்தகல்விவிருத்தியையிட்டு யேசுசபைக் குருமாருக்கு இந்தியா ஆழ்ந்த நன்றிக்கடனுடையதென்று அவர்கூறி, கத்தோலிக்கதிருச்சபையின் சகலமுயற்சிகளையும் தூண்டிவிடுவதும், உலகில் மற்றெந்தஸ்தாபனமும் மேற்கொள்ள முடியாததுமான சேவையினதும், தியாகத்தினதும் உண்மையான போக்குடையவர்களாகும்படி தமது உடன்சமயத்தவர்களான இந்துக்களைக் கேட்டுக்கொண்டார்.

## சமாதான திருச்சுரூபம்

தென்னமெரிக்காவிலே ஆர்ஜென்ரீன-சிலிஎனும் இருநாடுகளும் என்றைக்கும்நீங்காதநட்பாய் இருந்துவருவதாக உறுதிவாக்களித்து அதற்கோர்பிணையாக இருநாடுகளுக்குமிடையே அந்தீஸ்மலையில் உலகப்பிரசித்திபெற்ற கிறீஸ்துநாதரின் பாரியதிருச்சுரூபமஒன்று நிறுவப்படலாயிற்று. "திருமீட்பரான கிறீஸ்துநாதரின் திருப்பாதத்தில் தாங்களாகவே உறுதிவாக்களித்த சமாதானத்தை ஆர்ஜென்ரீனியரும், சிலியரும் குலைத்துச்சிதைப்பதைக் காட்டிலும் அதற்குமுன் இர்தமலைகளே துகள்துகளாக வெடித்துச் சிதைந்துபோவனவாக" எனும்வாக்கியம் அச்சுருபத்தின் ஆதாரபீடத்திலே வரையப்பட்டிருக்கிறது. இந்தச்சுருபம் நிறுவப்பெற்ற ஐமபதாம்ஆண்டு நிறைவுவிழா இவ்வருடம் கொண்டாடப்படவிருக்கிறது. "சமாதான"மகாநாடுகளிலே கிறீஸ்துநாதரினதும், பூமியிலுள்ள அவருடைய பதிலாளியினதும் உரிமைகள் ஒப்புக்கொள்ளப் படுகிறவரையிலே உலகம் சமாதானமஎன்பதை ஒருபோதுமே கண்டுகொள்ள மாட்டாது.

## பதினாறும் நூற்றுண்டுவிழா

லத்தீனிய வேதபாரகர்களிலே தலைசிறந்தவரெனக் கொண்டாடப்படுகிறவரான அர்ச். அகுஸ்தீனர்பிறந்த பதினாறும் நூற்றாண்டுவிழாவானது வட ஆபிரிக்காமுழுவதிலும் வருகிற கார்த்திகைமாதம் 13-ந்திகதியன்று கொண்டாடப்படவிருக்கிறது. இதிலே மகாவிசேஷப்பட்டகொண்டாட்டம்,இறந்தநகரென அறியப்படுவதாகிய ஹிப்போ பட்டணத்திலுள்ள மகாலயத்தில்நடந்தேறும். இங்கேதான் அர்ச். அகுஸ்தீனர் 35வருடகாலம் மேற்றிராணியாராய் விளங்கியிருந்தார். அவர் திருமேனி அடக்கஞ்செய்யப்பட்டுள்ள இத்தாலியதேச பாவியா நகரிலும் விசேஷவைபவங்கள் நடந்தேறும். சரிதாசிரியர்கள், தத்துவசாஸ்திரிகள், வேதசாஸ்திரிகளின் அகுஸ்தீனிமகாநாடு ஒன்றும்வருகிறபுரட்டாசிமாதம் பரீஸ்நகரில் நிகழவிருக்கிறது.

## மனந்திரும்பிய காப்பிரிகள்

அமெரிக்க ஐக்கியதேசத்திலே சென்றவருடம் நிகிரோவரெனப்படும் 9,428 காப்பிரிகள் மனந்திரும்பிக் கத்தோலிக்கராகியிருக்கின்றார்கள். அங்கே சென்றவருடம் மனந்திரும்பிய இந்தியர்கள் 536 பேர். தற்போது அத்தேசத்திலே காப்பிரிகளான கத்தோலிக்கராய் 4,57,996 பேரும், இந்தியரான கத்தோலிக்கராய் 1,08,364 பேரும் இருந்துவருகிறார்கள். காப்பிரிகளுக்கென அங்குள்ள எழுபது மேற்றிராசனங்களில் விசேஷதொண்டு நடைபெற்றுவருகின்றது. அங்கேஇவர்கள் 467 கோவில்களையும், 664 குருமாரையும், 330 பாடசாலைகளையும், 12 ஆஸ்பத்திரிகளையும், 24 ஆரோக்கிய சாலைகளையும், 22 அனாதசாலைகளையும், பிறவற்றையும் கொண்டிருக்கிறார்கள். அங்கு கத்தோலிக்கஇந்தியரே ஏனைய புரொட்டஸ்தாந்தஇந்தியர்களிலும் அதிகம்கூடிய தொகையினராய் இருக்கின்றார்கள். இவர்கள்மத்தியிலே 225 கத்தோலிக்ககுருமார் தொண்டாற்றி வருகின்றார்கள்.

# மரியாயின்வருடத் திருயாத்திரை

பங்களூரைச்சேர்ந்த செறியன்பிரயாணசேவைக்கம்பெனி இந்த மரியாயின்வருடத்திலே ரோமாபுரி, நேப்பிள்ஸ், அசிசி, லூர்துபதி, பரீஸ் முதலாம் பலவிடங்களுக்கும் ஓர்திருயாத்திரையை ஒழுங்குபடுத்தியிருக்கிறது. அடுத்த வைகாசிமாதம் 18-ந் திகதிமுதல் இரண்டுமாதகாலத்துக்கு இந்த யாத்திரை நீடித்திருக்கும். அன்று பங்களூரிலிருந்து இந்த யாத்திரை ஆரம்பமாகும். பங்களூரிலிருந்து ஐரோப்பாவுக்கும்—பிரித்தானியதேசத்திலிருந்து பங்களூருக்குமாக நடந்தேறவிருக்கும் சுற்றுப்பிரயாண முழுவதற்கும் ஏற்படும்முழுச்செலவும 4,500 ரூபாவாகும். போகும்போது ஆகாயவிமானத்திலும், திரும்பும்போது கப்பலிலும் இந்தப் பிரயாணம் நடைபெறும். முன்சொன்ன இடங்கள்தவிர, ஐரோப்பாவிலும், பிரித்தானியதேசத்திலுமுள்ள மற்றும்விசேஷப்பட்ட நகரங்களில் ஏறக்குறையஎல்லாவற்றையுமே தரிசிக்க இந்தயாத்திரையின் போது வசதியளிக்கப்படும்.

## பாதிரியாரின் திருபுதல்வர்

வண. ஆஷ்லி பெற்றிஸ்சுவாமியார் ரோமாபுரியிலுள்ள பீதா குருமடத்திலே சென்றபங்குனி மாதம் 31-ந் திகதியன்று குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றுள்ளனர். இவர் ஓர்அமெரிக்கர். கலம்பிய சர்வகலாசாலையில் தாம்அடியிட்ட சங்கீதகலாமன்றங்களைப் பதினைந்துவருடகாலம் தலைமைவகித்து நடத்தியவர். ஓர்காலம் சான் பிரான்சிஸ்கோநகர சங்கீதகழகத்தின் தலைவராய்இருந்தவர். சங்கீதவிழாக்களிலே பியானோவாத்தியம் மீட்டுவதில் அமெரிக்காவிற் போலவே ஐரோப்பாவிலும்பிரசித்திபெற்றவர். இவர் பீதாகுருமடத்திலும் பியானோ மீட்டுவதற்கு எப்போதுமே நேரம் கண்டுகொள்ளுகிறார். பியானோ மீட்டி வத்திக்கான் வானொலி நிலையத்தின்மூலம் இசைஒலி பரப்பியும் வருகின்றார். பிறெஸ்பிற்றேறியன்சபைப் பாதிரியார் ஒருவரின் புதல்வரான இவர் 1948-ம்ஆண்டு மனந்திரும்பிக் கத்தோலிக்கராயினர். தமது மனேஜர் நோய்வாய்ப்பட்டபோது இவர்தினமும் ஆஸ்பத்திரிசென்று அவரைச்சந்தித்து வந்தார். அப்போது அந்த ஆஸ்பத்திரி விசாரணைக்குரவரான ஓர்யேசுசபைச் சுவாமியாரைச் சந்தித்ததிலிருந்து இவர் மனந்திரும்பினர்.

## பிரான்சிய வேதசாட்சிகள்

பிரான்சிய புரட்சிக்காரர்கள் 1871-ம ஆண்டு வைகாசிமாதம் 25-ந் திகதி கொலைசெய்த வண. இறப்பாயேல் காட்ரியர் சுவாமியாரினதும், அவர்தோழர்களினதும் (இவர்களில் நால்வர் குருமடத்துப் பணியாளர்) பிரசித்திபெற்ற வேதசாட்சியத்துவமானது, இவர்களுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம்அருளும் விசாரணைசம்பந்தமாய்ச் சமீபத்திலே திருச்சடங்காசார திருச்சங்கத்தால் கலந்துவிவாதிக்கப்படலாயிற்று. இப்பதின்மூன்று பேரிலும் மூவர் தொமினிக்குவின் சபையைச்சேர்ந்த வண. தோமஸ் பூருர்ஸ், வண. கொன்ஸ்ரன்ரின் லெல்ஹோம், வண. ஹென்றி கொட்ரோ எனும் குருப்பிரசாதிகள். அமாத்துஸ் குரெருஸ், அன்தோய்னே மார்சல், பிரன்கோயிஸ் டின்ரெக்ஸ், யோசெவ் செமினல்எனும் நால்வரும் குருமடத்துப் பணியாளர்கள்.

## அறுபதாவது மேற்றிராணியார்

மலையாளத்திலே எர்ணுக்குளத்தின் துணைமேற்றிராணியாராக யோசெவ் பறெக்காற்றில்ஆண்டவர் சமீபத்திலே கருதினல் திசரூன் ஆண்டவரால் அபிஷேகஞ்செய்யப பெற்றனர். இவர் இந்தியாவின் அறுபதாவது மேற்றிராணியாராவர். சிறந்த அனுபவம்வாய்ந்த ஓர்பத்திரிகாசிரியரும், வித்தியாபண்டிதருமான இப்புதியமேற்றிராணியார் பழமையானசமஸ்கிருதமும், எபிரேயமும்உட்பட ஏழுபாஷைகளில் தேர்ச்சிபெற்ற [illegible]வர்.

# அகில—கத்தோலிக்க தீவு

அலஸ்காட்டிற்குச்சமீபமாகப் பேரிங்கடலிலே இருந்துவருகின்ற கிங்தீவானது எல்லோரையுமே கத்தோலிக்கராகக் கொண்ட ஓர்தீவாகும. அங்கு எஸ்கிமோவரான இருநூறு பேர் வசிக்கின்றார்கள். இவர்களில் ஏறக்குறையஎல்லாரும் அலஸ்காவிலுள்ள சோம்நகருக்குச்செய்த கோடைப்பிரயாணங்களின்போது மனந்திருப்பப்பட்டவர்கள். 1950-ம்ஆண்டுதான் இத்தீவுவாசிகள்அனைவரும் கத்தோலிக்கரானார்கள். அப்போது இத்தீவுக்குவெளியே பலவருடகாலம் சஞ்சரித்திருந்த இருகுடும்பங்கள் அங்கு திரும்பியபோது மனந்திரும்பலாயின. இத்தீவிலுள்ள கோவில் 200 பேரையும் அடக்கக்கூடியது. இவர்களிலே திவ்விய நன்மை பெறக்கூடியவர்களெல்லாம் வாரந்தோறும் பெற்றுவருகின்றார்கள். அர்ச். பயஸின் சங்கீதமாலையிலுள்ள சகல கீதங்களையும் இவர்கள் தங்கள் பாஷையிலே பாடிவருகின்றார்கள்.

## பாப்பரசரும் திவ்விய பூசையும்

இருமாதங்களின்முன் நோய் கண்டு குணமடைந்தபிறகு பரிசுத்தபாபபரசர் இம்மாதம் 4-ந் திகதி ஞாயிறன்று முதன்முறையாகத் திவ்வியபூசை நிறைவேற்றினர். அத்தருணம் அவரது டக்றரான புரொபெசர் கலீஸி-லிஸி அவர்களும, அந்தரங்க காரியதரிசியான வண. ஹென்டிக்ஸ்சுவாமியாரும், பாப்பரசர் மாளிகையைச்சேர்ந்த ஒருசிறு தொகையினரும் சமுகமாயிருந்தார்கள். அவர் வத்திக்கான் தோட்டங்களில் தினமும் திரும்பவும் உலாவிவரத் தொடங்கியதிலிருந்து அவரின்சுகத்திலே படிப்படியான திருத்தம் ஏற்பட்டுவருகிறதென்பது புலனாகிறது. அதுமுதல்அவர் உறுதியாகவும், பதமையாகவும், ஊன்றுகோலின் உதவியில்லாமலும் நடந்துவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரைமாதம்

**போதுக்கருத்து :—** பங்கு விசாரணைக் குருமாருக்காகவும், அவர்களுக்குஉதவியாயுள்ள குருமாருக்காகவும் வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து :—** ஸ்கான்டிநேவியாவிலும், ஐஸ்லாந்திலும்,பின்லாந்திலுமுள்ள திருச்சபைக்காக மன்ருடிக் கொள்வது.


சத்தியவேத

# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
சித்திரை மாதம் 22-ந் திகதி


## கிறீஸ்துநாதரின் உத்தானம்

சுபமங்களம் பொங்கும் உத்தானவிழாவை நாம் கொண்டாடுகிரேம். இம்மகோற்சவம் "உயிர்த்தெழுந்து விட்டார்" என்ற சிறு சுவிசேஷவாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது. கிறீஸ்துநாதர் போதித்து வந்த போழ்து: "இத்தேவாலயத்தை அழியுங்கள், மூன்று நாட்களில் அதைத்திரும்பவும் கட்டியெழுப்புவோம்" என்று கூறியிருந்தார். பெரியவெள்ளிக்கிழமையன்று உலகசரித்திரத்தில் மாகொடிய மரணசம்பவம்ஒன்று நடந்தேறியது. "சிலுவையிலறையும்! அறையும்! அவருடைய இரத்தப்பழி எங்களுக்கும், எங்கள் சந்ததிக்கும் இருக்கட்டும்" என்ற கூச்சல் ஜெருசலேமெனும் தொன்நகரின் வீதிகளிற் பரந்தது.

கிறீஸ்துநாதரை அழிக்கவேணுமென்று அந்நகரத்தார் கொண்டஆசை நிறைவேறியிலது. ஆனல், நரதேவனின் உத்தானம் அவர்களுடையபேச்சைப் பொய்யாக்கியது. மரணத்தைவென்றுகிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்ததானது உலகில் அன்றும் இன்றும் ஓர்சிறப்பான செய்திஎன்க. ஏனெனில், கிறீஸ்துநாதர் உத்தானமாகிபிராவிடில் எங்கள்விசுவாசம் விருதாவாகிவிடும்.

உத்தானவிழாவின் உயிர்நாடி "உயிர்த்தெழுந்தார்" என்பதுவே. உத்தானவிழாவையொட்டிய ஆராதனைகளிலும், உத்தான காலத்திலும் இதைத் திருச்சபை நமக்குநினைவூட்டுகிறது. திருச்சபைத்தாய் தனதுபிள்ளைகள் சாங்கோபாங்கத்தின் உச்சநிலையை அடையவேண்டுமென்றுஆசித்துச் சதாமுயற்சிக்கின்றது அதுஉலகில் எஞ்ஞான்றும் புத்துயிர்நிறைந்து, சந்ததிதோறும் சௌந்தரியம்பெற்று விளங்குகிறது.

வருடந்தோறும் உத்தானமகோற்சவ ஆராதனைகளில் "உயிர்த்தெழுந்தார்" என்னும்பொழுது, திருச்சபை தனதுநாயகரைப் பதிதாய்ஒருகால் தரிசித்ததுபோலாகிறது. தேவனுடன் தான்கொண்டிருக்கும் சம்பந்தத்தை மேலும்பலப்படுத்தியதுபோலாகிறது. உலக இதிகாசத்திலே முக்கியமான இத்தினத்தில் தனதுஞானமக்களைப் பரிசுத்தசீவியத்தில் புதுமுயற்சிசெய்ய ஊக்குவிக்கிறது. இத்தினத்தில்கிறீஸ்துவின் கடவுட்தன்மை யாவர்க்கும் புலனுகின்றதாகையால் அக்களிக்கும்படி அழைக்கிறது.

உத்தானவிழாவின் போது, உயிர்த்த இரட்சகரில் எமக்குள்ள விசுவாசம் அதிகஉறுதியடைதல் வேண்டற்பாலது. எதைத் தியாகஞ்செய்ய நேரினும் நமதுவிசுவாசத்தைக் கைவிடோம்என்ற மனஉறுதி நாம் கொள்ளவேண்டும். நமதுவிசுவாசத்தைக் காப்பாற்ற நாம் விரும்புவோமாகில் அதற்குரிய அறிவு நம்மில்அதிகரிப்பது அத்தியாவசியமாகின்றது. ஏனெனில், தன்விசுவாசத்தை எவன் நன்கறிந்து கொள்வானே அவன் அதைஒருபோதும் கைநெகிழமாட்டான்என்க.

## எலிசபேத் மகாராணியார்

மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியாரையும், அவர் நாயகரான எடின்பரோகோமகனையும் அன்று மகாஆடம்பர வைபவங்களுடன் நல்வரவேற்ற ஸ்ரீலங்காமக்கள் நேற்லறயத்தினம் மிகுந்தயனேகரத்துடன் பிரியாவிடைகூறி அவர்களைப் பயணமனுப்பி வைத்தார்கள். மகாராணியாரின் விஜயமானது, பொதுவாக எமதுநாட்டின் புராதனப்பெருமை வாய்ந்த நீடியசரித்திரத்திலும், சிறப்பாக நிகழும் 1954-ம் ஆண்டின் சரித்திரத்திலும் பொன்னட்சரங்களால் பொறிக்கப்படத்தகுந்த பிரஸ்தாபமிக்க ஓர்சம்பவமாய் என்றைக்கும் திகழுமென்பதற் கையமில்லை. கொழும்பு, சிகிரியா, பொலனறுவை, நுவரெலி, கண்டி என்பனவாய் மகாராணியார் தரிசித்த இடங்களிலெல்லாம் மக்கள் அவர் தரிசனையளித்த சுபநாளை ஓர்பெருநாளாகக் கொண்டாடித் தங்களுக்கியல்பாய் அமைந்துள்ள சீரிய விருந்தோம்புங்குணத்தைச் சிறப்பாகக் காட்டினின்ருர்கள். மகாராணியாரின் புன்முறுவல்கலந்த இன்வதனமும், ஆடம்பரமற்ற பழக்கவழக்கமும், அவர் எல்லவரோடும் இன்சொல்வழங்கி அன்பாகப்பேசியதும் ஆதியவெல்லாம் அவர்களைப்பெரிதும் வசீகரஞ்செய்து, அவர்கள் அவர்பால் அணைகடந்த அன்பும், அபிமானமும், உன்னதமதிப்பும் கொள்ளச்செய்தன. மகாராணியார் ஸ்ரீலங்காவுக்கு வந்தார். மக்களுக்குக் காட்சிதந்தார் பிரியாவிடை பெற்றுச் சென்ருர். ஆனல், அவர் இங்கே தங்கியிருந்த பன்னிரு தினங்களிலும் நிகழ்ந்தசம்பவங்களோ மகாராணியாரினதும், மக்களினதும் உள்ளங்களிலே எக்காலமும்அழியாத இன்பகரமான ஞாபகங்களாய் நிலைபெற்றிருக்குமெனலாம். "சாம்பிராச்சியநாடுகளிலே சுற்றுப்பிரயாணஞ் செய்துவரும் அரசதம்பதிகளுக்கு இலங்கையில் அளிக்கப்பெற்ற வரவேற்பைப்போல் வேறெங்கும் அளிக்கப்படவில்லை 'யென்று லண்டன்நகர பத்திரிகைகள் கூறியிருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## புதிய கவர்னர்-ஜெனறல்

தற்போது இலங்கையின் கவர்னர்-ஜெனறலாகச் சோல்பறி பிரபு இருந்துவருகின்ருர். சுதந்திரமபெற்ற இலங்கையின் முதலாவது கவர்னர்-ஜெனறலான இவர் வருகிற ஆடிமாதம் தமதுபதவியினின்று இளைப்பாறவிருக்கின்ருர். அதனல் இவரிடமாக நிதிமந்திரியாரான சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் இலங்கைப்புதிய கவர்னர்-ஜெனறலாக மகாராணியாராலே நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். ஆகவே இலங்கையின் கவர்னர்-ஜெனறல் பதவியை வகிக்கவிருக்கும் முதலாவது இலங்கைமகன் இவரே. அதனலை, மகாராணியாரின் இலங்கைவிஜயத்துடன் சம்பந்தப்பட்டுள்ள பெருமைவாய்ந்த சம்பவங்களில் இஃதுமொன்ருகச் சரித்திரத்தில் இடம்பெறுமென்பதில் சந்தேகமில்லை. இலங்கையிலே குடியேற்றநாட்டு ஆட்சி நடைபெற்றுவந்த காலத்தில் ஐரோப்பியர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த எந்தப்பெரிய உத்தியோகக்டமைகளையும் ஆற்றுவதிலே தமக்குள்ள ஆற்றலையும், மதியூகத்தையும் சாதனையிலே என்றைக்கும் காண்பித்துவந்துள்ள பெருமகனை சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் இலங்கையின் கவர்னர்-ஜெனறல்பதவிக்குச் சாலவும் தகுதியானவரே என்பதை எவருமே ஆட்சேபிக்கமாட்டார்கள். அதனல் மகாராணியாரது ஆணையின்பேரிலே இராணிமாளிகை தனதுமகத்தான கபாடங்களைத்திறந்து அவரை வரவேற்கத் தயாராயிருக்கின்றது. தற்போது 61 வயதுடையவரான சேர் ஒலிவர்அவர்கள் தமது வாழ்க்கையின் பல்வேறுதுறைகளிலும் முக்கியத்துவம்வாய்ந்த பதவிகள்வகித்து, ஆற்றியுள்ள மேலானசேவைகள் போற்றற்பாலனவாகும். இவர் சுருட்டோ அன்றேல் சிகறெற்ருே புகைப்பதில்லை. மதுபானம் அருந்துவதில்லை. இத்தகைய பெரியார்ஒருவரை மனச்சான்று தவருது கவர்னர்-ஜெனறல் பதவிக்குச் சிபாரிசுசெய்த பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களின் செயலும் பாராட்டற்குரியதே. புதியகவர்னர்-ஜெனறல் நீடூழிவாழ்க!

## ஆசியபிரதமர்கள் மகாநாடு

இம்மாதம் 28-ந் திகதியன்று கொழும்பிலே ஆரம்பமாகி நடந்தேறவிருக்கும் ஆசியப்பிரதமர்களின் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு பாகிஸ்தான்பிரதமர் முகம்மதுஅலி அவர்கள் தலைமையில் பாகிஸ்தான் தூதுக்கோஷ்டி வருகிற 26-ந் திகதி ஆகாய விமானமூலம் கொழும்புவந்துசேரும். இந்தியா, பர்மா, இந்தோனேஷிய நாடுகளின் பிரதமர்கள் விசேஷவிமானங்கள்மூலம் அடுத்த 27-ந் திகதி வந்துசேரவிருக்கின்ருர்கள். இந்த மகாநாட்டிலே பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்களின் ஆலோசகர்களாக நிதிமந்திரியார் சேர் ஒலிவர் குணதிலகஅவர்களும், உணவு-கமத்தொழில் மந்திரியார் ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்களும் இருந்துவருவார்கள்.



## பரிசுத்த பாப்பரசரின் ஈஸ்றர் கோரிக்கை

### "சலவாயுக் குண்டைத் தடைப்படுத்துங்கள்"

77 வயதுடையவரான 12-ம் பத்திநாதபாப்பரசர் உலகமுழுவதற்கும் சென்ற உத்தான ஞாயிறன்று வத்திக்கானிலிருந்து அனுப்பிய வானெலிச்செய்தியில் "பயங்கரமிக்க கொடுமைபயக்கும் புதிய பரிநாசயுத்தகருவிக"ளை எதிர்த்து ஒரு எச்சரிக்கை விடுத்துள்ளார். அத்தோடு அணுக்குண்டுகள், கொள்ளை நோய்களை உண்டுபண்ணும் விஷக்கிருமிக் குண்டுகள், ரசாயனகுண்டுகளின் யுத்தத்தைத் தடைசெய்யவேணடும் என்றும் பரிவாகவேண்டிக் கொண்டார்.

"மனக்கொதிப்பாலும், அபாரசெலவாலும் ஏற்படும் அந்நியோன்ய பீதித்தொடர்பில்அல்ல, கிறீஸ்துவசித்தாந்தமாகிய பொதுநேசத்திலும், பலவந்தமாகப் பெறப்படாது உதாரமனதோடு வழங்கப்படும் நீதியிலும்மாத்திரம் சமாதானம் தங்கியிருக்கிறதென்பதை இராச்சியங்களின் தலைவர்கள் உணரும்நாள் எந்நாளோ?" என்று ஒருகேள்வியையும் பொறித்துள்ளார் பாப்பரசர்.



## சதாசகாயமாதா கோணம்

### "என்இல்லம் சந்தோஷத்தால் தேங்கி வழிகின்றது"

1952-ம் ஆண்டு ஆவணிமாதம் 27-ந் திகதி புதன்கிழமை நான் முதன்முதல் உம்மைத்தரிசித்து, என் சம்பளத்தில் ஏற்பட்டிருந்த பிழையைச்சுட்டி உமக்கு ஒரு விண்ணப்பம சமர்ப்பித்தேன். நான் பெறவேண்டிய சம்பளத்திலிருந்து ஏறக்குறைய 50 ரூபா மட்டில் மாதாந்தங் குறைத்துக் கொடுத்தார்கள். இந்தக் குறைந்த சம்பளத்தையே சென்ற 5 வருடங்களாக நான்பெற்றுவந்தேன். இதையிட்டு அரசாங்க உயர்உத்தியோக வட்டாரங்களுக்கு எல்லாம் மனுப் பண்ணினேன். எனது சம்பளத்தில் ஒருவிதமாற்றமுஞ்செய்ய முடியாதென மேலதிகாரிகள் தீர்ப்பளித்துவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானோ ஓர்குடும்பஸ்தன். என்மனைவியையும், மூன்றுபிள்ளைகளையுந் தாபரிக்கவேண்டியவன். எனதுமாதாந்த சம்பளத்தைவிட வேறுவரும்படிஒன்றும் இல்லாதவன். இவ்விதநிலைமையில் எனக்குவரவேண்டிய சம்பளத்திலும் 50 ரூபா குறைந்ததால், அடிக்கடி கடன்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

என் நண்பர்ஒருவர் என்நிலைமையை அறிந்து, சதாசகாயமாதாவிடம் போய்த் தொடர்பாக ஒன்பதுபுதன்கிழமை நோவனைகளிற் பங்குபற்றினால் எனதுசம்பளம் திருத்தியமைக்கப்படும் என்று தான்பூரணமாக நம்புவதாகக் கூறினார். அவர்வாக்கைச் சிரமேற்கொண்டு தொடர்பாக ஒன்பது நோவனைகளிற் பங்குபற்றினேன். ஆனால், நான் ஒருவிதபலனும் அடையவில்லை. என்றாலும் மனதைச்சோரவிடாது ஒருநோவனையுந் தப்பவிடாது தொடர்பாக நோவனைகளுக்குச் சமுகங்கொடுத்து, நம்பிக்கையுடன் மன்றாடிக்கொண்டுவந்தேன்.

மன்றாடுவதோடுமாத்திரம் நில்லாது, மீண்டும வேறுகாரணங்கள் காட்டி எனது சம்பளவிஷயமாகத் திறைசேரிக்கு மனுப்பண்ணினேன். தொடர்ச்சியாக நான் செய்துவந்த 68-ம் நோவனையின்பின் 1953-ம் ஆண்டு மார்கழிமாதம் 18-ந் திகதி வெள்ளிக்கிழமை நிதிமந்திரியின் காரியாலயத்திலிருந்து எனக்கு ஒருகடிதங் கிடைத்தது. அதில் எனதுசம்பளம் 50 ரூபாவால் உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும், அத்தோடு எனக்குவருமதியான பாக்கிச்சம்பளம் 2,538ரூபாவையும் கொடுக்கும்படி உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அறிவித்திருந்தார்கள்.

என் அருமைத் தாயாரே! என் வேலைத்தலம் கொழும்பில்இருந்தாலும், நான் ஒவ்வொருநாளும் 17மைல் தூரத்திலிருந்து வருகிறேன். நான் உமதுசேத்திரத்துக்கு ஒழுங்காகவருவதை அவதானித்தசிநேகிதரும், இனசனரும் என்னை நகைத்து கையாண்டி பண்ணினார்கள். மனவருத்தங்கொடுக்கும் குத்துவார்த்தைகள் போட்டார்கள். தம்பியாண்டானுக்குத் தலைதடுமாற்றம் என்றார்கள். பிறமத நண்பர் சிலர்: "பொறனைக்கோவில் பிரசாரயந்திரம்; அதினால்உனக்கு ஒருவிதபலனுங் கிடையாது" என்றார்கள். ஆனால், எனதுநோவனைகளை அவர்களாற் தடுக்கமுடியவில்லை. சோனாவாரியாக மழைபெய்தாலென்ன, எனதுகிட்டிய உறவின் முறையினரிடையே சாவு நேரிட்டாலென்ன, ஹர்த்தால்சம்பந்தமாக அரசாங்கத்தார் ஏற்படுத்திய அவசரசட்டத்தால் உண்டாய பயப்பிராந்தி இருந்தென்ன, இவைஒன்றும் என் நம்பிக்கையை அசைக்கவில்லை. எத்தனையோஇடையூறுகளைச் சமாளித்து, விடாப்பிடியாய், தொடர்பாய் 68 கிழமை உமதுஅண்டை ஓடிவந்தேன். புண்ணியவான்களை மாத்திரம் அல்ல, பாவியாகியஎன்னையும் ஆசீர்வதிக்கவும், எனதுவேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவும் சதாசகாய இராக்கினியாகியநீர் தயங்கவில்லை. தேவவரப்பிரசாதம்நிறைந்த உமதுதிருசேத்திரத்தை அடைந்து எனக்குத்தேவையான இகபரநன்மைகளைக் கேட்டடைய என்சீவியகாலம்மட்டும் மறக்கமாட்டேன். என்னுடையவும், என் பெண்சாதி பிள்ளைகளுடையவும் தாழ்மையான நன்றித்துதிகளைத் தயவாகஏற்றருளும். உமதுடையதயவினாலும், இரக்கத்தினாலும் இப்போது எனதுஇல்லம் சந்தோஷத்தால் தேங்கிவழிகின்றது. உண்மையானசமாதானம் நிலவுகின்றது. எங்கள்வாழ்க்கைப்படகு இடையூறின்றி அமைதியாக ஓடுகின்றது. சதாசகாய மாதாவே! உமக்குப் புகழ்ச்சியுண்டாகுக.

[சிதுவாவில் வசிக்கும் M. G. S. டிசில்வாஎன்பவர் "நோவனைப்புதினம்" எனும் ஆங்கிலப்பத்திரிகையிற் பிரசுரித்த நன்றித்துதியின்சாரம்.]

## நல்ல நாளிது!

"ஞானி"

1

தேவனார் உயிர்த் தெழுந்த
சீரிய நல்நா ளிது!
திசையனைத்தும் இசை யெடுத்துச்
சீர்த்தி பாடும் நாளிது!
பாவ மக்கள் மீட்சி பெற்றுப்
பரிம ளிக்கும் நாளிது!
பண்டுரைத்த வாக்கு யாவும்
பலித்து நின்ற நாளிது!
மேவுஞ் சத்ய வேத உண்மை
விளக்கி நின்ற நாளிது!
விளைந்த பாவப் பயிரை யெல்லாங்
களைந் தெறிந்த நாளிது!
காவ லான கர்த்த னுள்ளங்
கனிந்து நின்ற நாளிது!
கனவு கண்ட பூத ரெல்லாம்
நனவு கண்ட நாளிது!

2

அன்பும் அருளுங் கூடி நின்றே
ஆட்சி செய்யும் நாளிது!
அலகை யுகை அல்லல் யாவும்
அகன்று போகும் நாளிது!
வன்புந் துன்புங் கலந்த வாழ்வில்
மனஞ் செலுத்தா நாளிது!
வைத வர்க்கும் வாழ்வளித்து
மாண்பு காட்டும் நாளிது!
என்பி ரேட்ட உயிரை யீந்து
எம்மை மீட்ட நாளிது!
ஈசன் பாதம் பூசை செய்தே
இன்பங் காணும் நாளிது!
பொன் னுலகும் பூவு லகும்
போற்றும் நல்ல நாளிது!
புதுமைக் குமேற் புதுமை யான
புனித நல்ல நாளிது!

3

"இந்தத் தேவ ஆல யத்தை
இடித்துப் போடும் இதனைநான்
ஈதோ மூன்று நாளிற் கட்டி
எழுப்பு கின்றேன்" என்றுரை
தந்த திரு வாக்கி யத்தின்
தாற் பரியம் விளக்குநாள்!
தாங்குந் தம திரித்துவச் சீர்
ஓங்கும் நல்ல நாளிது!
அந்தத் தேவ தூதர் கானம்
அணிந்து பாடும் நாளிது!
அன்னை யான கன்னிமரிக்
கானந்தஞ் சேர் நாளிது!
விந்தைக்கும் மேல் விந்தை யான
மேன்மை வாய்ந்த நாளிது!
வேத ஞான வாங்க ளெல்லாம்
வேண்டுந் திரு நாளிது!

---

## நாலு சங்கதிகள்

— ஓர்பெல்ஜிய மிஷனரியான வண. றெமி வான்ஹெவாரிசுவாமியார் கம்யூனிஸ்தமங்கோலியாவிலே 26மாதகாலம் சிறையிருந்தபின் சமீபத்திலே ஹொங்கோங்தீவுபோய்ச் சேராலாயினர். தமதுநீடிய சிறைவாசகாலத்திலே தமக்குச் செய்யப்பட்ட வேதனைகளின் அடையாளங்களை அவர் இன்னுமே கொண்டிருக்கின்றார். இரண்டு வருடமாகத் தாம்இடைவிடாது சங்கிலியால் கட்டிவைக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

— மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்குப் பங்கமுண்டாகும் பயமுறுத்துகை இருந்துவருகிறவரையிலே மேற்கு ஜேர்மனிஉட்பட ஐரோப்பாவில் அமெரிக்கபடைகள் போதியஅளவாகநிறுத்திவைக்கப் பட்டிருக்குமென்று அமெரிக்கஜனாதிபதி ஜெனறல் ஐஸன்ஹாவர் அவர்கள் சென்ற 16-ந் திகதியன்று உறுதிவாக்கு அளித்திருக்கிறார்.

— இரத்தஅழுக்கநோயைக் குணப்படுத்துதற்கென்று பிரித்தானிகண்டுபிடித்திருக்கும் மாத்திரைமருந்தைப் பரிசோதனைசெய்ததில் ஊக்கமளிக்கத்தகுந்த சித்திஏற்பட்டிருப்பதாகச்சிக்காகோநகரிலே டக்றர்எட்வாட் பிறேயிஸ்எனும் [illegible] கூறுகின்றார். "பொன்ரப்பிறேலிடினியம்" என அறியப்படும் இந்தமருந்தானது இரத்தகோளங்களுக்குச் செல்லும் நாம்புகளைத் தடைப்படுத்தி இந்த அழுக்கத்தைக் குறைத்துவிடுகிறதாம்.

— தமது சுவநாடிழந்த யூகோசிலேவியநாட்டின் நீக்கலஸ் இளவரசர் சென்ற 13-ந் திகதி இங்கிலாந்திலே அய்வர்எனுமிடத்திலிருந்து லண்டனை நோக்கித் தமது விளையாட்டுக்காரைத் தனிமையாகச் செலுத்திச் சென்றபோது விபத்துக்குள்ளாய் ஓர்பள்ளத்தில்வீழ்ந்து இறந்துபோயினர். இவர் கென்ற்கோமகனின் மருகர். வயது 25 அய்வர்எனுமிடத்திலேயே கென்ற்கோமகன் வசித்துவருகின்றார்.

— யப்பானிய கோழிகள் சென்ற 1953-ம் ஆண்டிலே முந்தியவருடத்திலும்பார்க்கச் சுமார் 50 கோடிமுட்டைகள் குறைவாக இட்டிருப்பதாக ரோக்கியோ நகரிலுள்ள வங்கிஒன்று கணக்கெடுத்திருக்கிறது. 1952-ம் ஆண்டு 300 கோடி முட்டைகள் இட்ட யப்பானியகோழிகள் சென்ற 1953-ம் ஆண்டு 250 கோடிமுட்டைகளே இட்டிருப்பதாக அதுமதிப்பிட்டிருக்கிறது.

புத்தக மதிப்புரை

## தொழில் செய்வது எப்படி?

எழுதியவர் :— திரு. ஆர். தயாநிதி. ஆசிரியர் : 'உலகம்' திருச்சிராப்பள்ளி.

பதிப்பகம் :— கஸ்தூரி பதிப்பகம். உறையூர் — திருச்சிராப்பள்ளி.

விலை :— ரூபா 1 சதம் 25.

ஒருநாட்டின் சுபீட்சத்திற்கு அரசியற்சுதந்திரம் மாத்திரம் போதியதாகாது. பொருளாதார சுதந்திரமும் வேண்டும். பொருளாதார வளக்குறைவால் வறுமையும், பிணியும் நாட்டில் நிலவும். படித்த வாலிபர்களபலர் வேலையில்லாது திண்டாடுகிறார்கள். அவர்கள் உத்தியோகத்தை எதிர்பார்த்து அலைகிறார்கள், எவராவது தொழில்செய்ய முற்படுகின்றாரில்லை. எங்கள் நாட்டில் தொழில்செய்தல் இழிவானதாகக் கருதப்படுகின்றது. இதன்காரணம் தொழில்துறை சம்பந்தமான நூல்கள் வெளிவராமையேயாம். இக்குறையை ஆசிரியர் தயாநிதி அவர்கள் நீக்கமுற்பட்டிருக்கிறார். தமிழகத்துஇளைஞர்களுக்குத் தொழிலாசை ஏற்பட்டுச் சமுதாயஉயர்வு ஏற்படவேண்டும்என்ற குறிக்கோளுடன் அவர் இந்நூலைச் சமர்ப்பிக்கிறார். இதிலேஅவர் மற்றெல்லாத் தொழில்களிலும் சிறந்தது உழவுதொழிலஎன்பதை முதலில் அழுத்தமாக எடுத்துக்காட்டிவிட்டு, சுயமாகச்செய்து வாழ்க்கை நடத்தக்கூடிய பலதொழில்துறைகளையும், அவற்றைநடத்தும முறைகளையும் விளக்கிக் காட்டியிருக்கின்றார். இதன்கண் முதலீடு, கொள்முதல், விற்பனை, விளம்பரம், கணக்குகள் என்பன போன்ற முக்கிய தொழில்அம்சங்கள் குறித்தது விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. தன்னம்பிக்கை, பொறுமை, ஊக்கம், உண்மை முதலியன வணிகத்தை வளம்படுத்தும் என்பது அவர் கருத்து. 'முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்' என்பதை உறுதிப்படுத்துகிறார் அதற்கு ஆதாரமாக அறிஞர்களின் அமுதவாக்குகளையும் எடுத்துக்காட்டுகிறார். எனவே, இந்நூலானது பேனாபிடிக்கும் தொழிலைவிடப் பிறதொழில்களெல்லாம் மரியாதைக்குறைவானவைஎன்று நினைந்து வேலையின்றிக் காலத்தைக் கழித்து வாளாஅலைகின்ற இளைஞர்களுக்கும், ஏனையோர்க்கும் ஓர் கைந்நூலாகும். அதனால் தமிழுலகில் எல்லோரும் இதனைப்பயன்படுத்த வேண்டுமென்பதே நமதுபேராவலாகும். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

---

## சுதேச வர்த்தமானம்

### வீரமுனைக் கலகம்

கல்முனை-கல்லோயா வீதியிலே சம்மாந்துறையைச்சேர்ந்த வீரமுனை எனும் கிராமத்தில் சென்றவெள்ளிக்கிழமை பெருங்கலகமொன்று நடந்து, அதன்விளைவாகச் சம்மாந்துறைப் பட்டினசங்க உபதலைவரான திரு. கே. மாணிக்கம்என்பவர் சுட்டுக்கொல்லப்படலாயினர். 68 வீடுகள் எரியூட்டப்பட்டுத் தரைமட்டமாயின. பெரும்போகத்துக்குப்பின் இந்த வீடுகளில் சேகரித்துவைக்கப்பட்டிருந்த சுமார் 2,000புசல்நெல்எரிந்துசாம்பராயிற்று. அத்துடன் பல்லாயிரக்கணக்கானரூபா பெறுமதியுள்ள வண்டிகள், வீட்டுத் தளபாடங்கள், பொருள்பண்டங்கள் ஆதியன சேதமடைந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இக்கலகத்திலே முப்பதுபேருக்குமேல் காயமடைந்திருக்கிறார்கள். இவர்களில் முஸ்லீம்களான இருகிராமதலைமைக்காரரும் அடங்குவார்கள். வீரமுனைக் கிராமவாசிகள் பெரும்பாலும் தமிழர்களே. கிராமத்தலைமைக்காரரான முஸ்லீம்கள்இருவரும தாக்கப்பட்டதிலிருந்து இந்தக்கலகம் ஓர்சாதிக்கலகமாக மாறியதென்று சொல்லப்படுகிறது. இக்கலகத்தினால்ஏற்பட்ட பயப்பிராந்தியாலே வீரமுனையில வசித்திருந்த 68 தமிழ்க்குடும்பங்களில் சில குடும்பங்கள்தவிர, ஏனையவைகளெல்லாம் அயலிலுள்ள அம்பாரை, காரைதீவு, மல்வத்தை, மல்லிகைத்தீவு, சொறிக்கல்முனை ஆதியாம கிராமங்களில்போய் அடைக்கலம் புகுந்துகொண்டார்கள். துப்பாக்கிச்சூடுபட்டுக் காயமடைந்த 26 வயதுடைய மகமதுகாசிம்என்பவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சென்ற சனிக்கிழமை மரணமாயினர். கலகத்தின்போதுமுஸ்லீம்கள் அக்கிராமத்துள் புகுந்து வீடுகளில்இருந்த பித்தளைப் பாத்திரங்கள், நெல், வீட்டுத்தளவாடங்களை எடுத்துக்கொண்டு அவற்றை எரியூட்டினரென்றும், எரியூட்டும்போது சிலபெண்கள் அவற்றில் இருந்தனரென்றும், இன்னாரென்று அவர்களைக் காட்டிக்கொடுத்தால் மேலும் சங்கடம் ஏற்படுமெனப்பயந்து அப்பெண்கள் அவ்வாறுசெய்ய மறுக்கின்றனரென்றும் செய்திகிடைத்திருக்கிறது.

### ஐம்பதுலட்சம் ரூபாநன்கொடை

கொழும்புத்திட்டத்தின்கீழ் உணவுப்பொருட்செய்கை முயற்சிக்கென்று ஆஸ்திறேலியா இலங்கைக்கு ஐம்பது லட்சம்ரூபா நன்கொடையளிக்கவிருக்கிறது. இந்தப்பணம் படாவியா, பாவற்குளம், வவுனிக்குளம் ஆதியவற்றைத் திருத்துவதற்கென உபயோகிக்கப்படுமெனத் தெரியவருகிறது. இந்த ஐம்பதுலட்சம் ரூபாவிலும் அரைவாசியைத் தளவாடங்களாகவும், அரைவாசியை மாவாகவும் ஆஸ்திறேலியா வழங்கும்.

### புதிய டக்றர்மார்

இலங்கைச்சர்வகலாசாலை சென்ற மாதம்நடத்திய வைத்திய கடைசிப் பரீட்சையிலே 42 பேர் புதியடக்றர்மாராக அரங்கேறியிருக்கின்றனர். இவர்களிலே எஸ். ஆர். கிறிஸ்ரோப்பர், செல்வி. எஸ். ஹண்ற், ஈ. சி. எம். முத்தையா, என். நாகரட்ணம், ரி. பரமேஸ்வரன், ரி. வைத்தியநாதன், எம். விசுவரட்ணம், ஜே. எல். அமரசிங்கம், ஆர். அருள்பிரகாசம், கே. பாலசிங்கம், எஸ். ஜே. பாட்லெற், ஜே. இளையதம்பி, ஏ. பூவீந்திரம், வி. யோகநாதன் என்பவர்களின் நாமங்களும் அடங்கியிருக்கின்றன.

* * *

— ஒல்லாந்திலே டிறிபோர்ஜென் எனும் கிராமத்தைச் சேர்ந்த 67 வயதுடைய கிறும்என்பவரும், அவரது 71 வயதுடைய நண்பரான ஜான் வில்ம்சென் என்பவரும் சமீபத்திலே கால்நடையாக றோமாபுரிக்கு யாத்திரையாகப் புறப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது :

அருமைச் சகோதரங்களே!

நீங்கள் விடுமுறை காலத்தை மிகவும் சந்தோஷமாய்க் கழிக்கிறீர்களாம என்று கேள்வி. இந்தச் சந்தோஷமான காலத்திலும் நீங்கள் அனுசரித்துவந்த வேத கடமைகளை எப்போதும்போல அனுசரித்துவர வேண்டும். பின்வரும் கேள்விகளுக்கு விடை தருவீர்களா?

1. ஒவ்வொரு நாளும் காலே, மாலேச் செபஞ் சொல்லி வருகிறீர்களா?
2. ஞாயிற்றுக்கிழமைப் பூசை தவருமல் கண்டு வருகிறீர்களா?
3. மாதம் ஒருமுறையாவது பாவசங்கீர்த்தனம் செய்து, அடிக்கடி திவ்விய நன்மை பெற்று வருகிறீர்களா?
4. பெற்றேருக்கு அமைந்து நடக்கிறீர்களா? அவர்கள் சொல்லும் வேலேகளை யெல்லாம் செய்து வருகிறீர்களா?
5. சகோதரர், சிநேகிதருக்குப் பிறர்சிநேகம் காண்பித்து வருகிறீர்களா?
6. கெட்ட சகவாசத்தை விலக்கி வருகிறீர்களா?
7. உங்களுக்குச் சொந்தம் இல்லாத பொருட்களை அபேட்சித்து வருகிறீர்களா?
8. உண்மை பேசி வருகிறீர்களா? தண்டனேக்குத் தப்பவென்று தானும் பொய் சொல்லி உங்களேக் கோளேகளாகக் காட்டிக் கொள்ளுகிறீர்களா?

இந்தக் கேள்விகளை எழுதி ஒருமட்டையில் ஒட்டி உங்கள் மேசையிலே அடிக்கடி காணத்தக்க இடத்தில் வையுங்கள். அடிக்கடி அதை வாசித்து உங்கள் மனதைச் சோதியுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணு.

## நல்ல பையன்

'ஜெயம்'

1. காலே மாலே தோறும் யேசு
   கர்த்தன் பாதம் ஏத்தி
ஞால மீது அன்பு பூண்டு
   நன்மை வேண்டி வாழ்வான்.
2. அன்னே தந்தை சொன்ன நல்ல
   அமுத வார்த்தை ஏற்று
பொன்னேப் போலும உண்மை காத்துப்
   புனித வாழ்வு வாழ்வான்.
3. என்றும் பாட சாலே ஏகி
   இனிய கல்வி தேடி
குன்றி டாத பயன டைந்து
   கூடி நாடி வாழ்வான்.
4. ஏழை எளிய பேர்கள் மீது
   என்றும் கருணே கொண்டு
மூழுந் தீய கோபம் நீக்கி
   முறுவல் பூத்து வாழ்வான்.
5. கல்வி ஞானம் நீதி யுள்ள
   கண்ய சீலர் தம்மை
நல்ல பையன் எந்த நாளும்
   நன்கு போற்றி வாழ்வான்.

## சின்னமேரி செய்ததுஎன்ன?

சின்னமேரி வசித்த சிறுகிராமம் பட்டணத்தில் இருந்து வெகுதூரத்தில் உள்ளது. ஓர்முறை அந்தக் கிராமத்தின் அயலிலே யுத்தமொன்று நடந்தது. அதனுல் அந்தக் கிராமத்தைப் பாதுகாக்க யுத்தவீரர் அங்கு தருவிக்கப் பட்டனர். ஆனுல், அவர்கள் தங்கப் போதியவசதியான இடம் அங்கேயில்லே. கிராமத்தில் இருந்த ஆலயம் மாத்திரமே மிகப்பெரிய கட்டடம். ஆனுல், அங்கு திவ்வியநற்கருணை வைக்கப்பட்டிருந்தது. அதனுல் யுத்தவீரர் அதிலே தங்கமுடியவில்லே. என்னசெய்வது என்று கிராமமக்கள் யோசித்தனர். அன்று சுவாமியாரும் அங்கு இல்லே. நற்கருணேயை எப்படி வெளியே கொண்டு செல்வது? நற்கருணேப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டுபோய்ப் பூச்சியமாகச சுவாமியாரின் மனேயிலே வைத்தால் தகுந்த பாதுகாப்பாய் இருக்கும். ஆனுல், யார் அதைச் செய்யக் கூடும்?

அப்போது சனக்கூட்டத்திலே நின்ற ஒரு பெரியவர் அவர்களேப் பார்த்துச் சொல்லுவார்: "என்னது மகள் சின்னமேரிக்கு இப்போதுதான் ஆறு வயது தொடங்கி யிருக்கிறது; அவள் கள்ளங் கபடு இல்லாத சிறுமிதானே; நான் அவளேத் தூக்கிக் கொண்டுபோய் அவளின் சிறிய கரங்களால் பாத்திரத்தைத் தூக்கச்செய்து குருமனேக்குக் கொண்டு வரலாம்; என்ன நினேக்கிறீர்கள்?" என்றூர்.

"அது நல்ல யோசனே தான்; எங்களுக்கும் அது சம்மதம்" என்றூர்கள்.

உடனே அவர் தமது வீடு சென்றூர். மேரியின் தாய் அவளுக்கு ஸ்நானஞ் செய்து, தூய வெள்ளே உடை அணிந்தாள். எல்லாரும் ஆலயத்திலே காத்துக் கொண்டு இருந்தார்கள். நற்கருணேப் பேழையின் கதவு திறக்கப் பட்டது. சின்ன மேரியின் சிறிய கரங்கள் பாத்திரத்தை ஏந்தின. தகப்பன் அவளேத் தூக்கினுர். சனங்கள் எல்லாரும் இருவர் இருவராக வரிசையாய்க் குருவானவரின் மனேயைநோக்கிச் சுற்றுப் பிரகாரமாகச் சென்றூர்கள். சின்னமேரி தனது ஆண்டவரான சின்னயேசுவை ஆனந்தம் பொங்கப் புன்னகையுடன் ஏந்திச் சென்றுள்.

இரா முழுவதும் சனங்கள் திவ்விய நற்கருணேக்கு முன்பாக இருவர் இருவராய் மாறிமாறி ஆராதனே செலுத்திக் கொண்டே இருந்தார்கள். மறுநாள் குருவானவர் வந்து சேர்ந்தார். நடந்ததை அறிந்த தமது பங்குக் கிறீஸ்தவர்களின் விசுவாசத்தைப் பாராட்டி அவர்களே ஆசீர்வதித்தார்.

திவ்வியநற்கருணே என்னும் தேவதிரவிய அனுமானம் சீவியர்களின் தேவதிரவிய அனுமானம், ஆதலால், நீங்களும் யேசுவை உங்கள் இருதயங்களில் ஏந்துவதற்குச் சின்னமேரியைப் போல ஆத்தும தூய்மையுடன் இருக்க வேண்டும்.

— எம். ஜெயம்.

## தாயின் அன்பு

காலே 7 மணி இருக்கும். மாணவிகள் பாடசாலேயை நோக்கிப் புத்தகமும் கையுமாகச் சென்றூர்கள். அவர்கள் ஒன்று கூடிச் செல்லும் காட்சி ஒருபக்கம். அவர்கள் கைகோத்துச் செல்லும் காட்சி மறுபக்கம், இவர்களின்கூட்டம் எதிலும் சேராது தனியே வாடியமுகத்துடன் சென்றுள் லீலா. கையில் புத்தகப்பை தவிரச் சாப்பாடு ஒன்றும் இல்லே. கவலேயுடன் "என் அம்மா உயிருடன் இருந்தால் இப்படி நடக்குமா?" என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டே நடந்தாள்

லீலாவுக்கு வயது பதினுறு. பத்து வயது நடக்கும்போது தாயை இழந்துவிட்டாள். தந்தை மறுமணம்செய்து கொண்டபின் அவர் அவளே முன்போலக் கவனிப்பதில்லே. சிறியதாய் லீலாவைக் காணும்போதெல்லாம் சுடுமுகம் காட்டுவாள். இவ்வளவு காலமும் அன்பால் வளர்க்கப்பட்ட லீலா இப்போது சிறிய தாயின் அதட்டலால் வளர்க்கப்பட்டாள். காலேயில் எழுந்து பாடசாலே போகிறவரை அவள்தான் வீட்டுவேலேகள் செய்வது. பின்னர் ஏதோ கிடைத்ததைச் சாப்பிட்டுவிட்டுப் பாடசாலேக்குப் போகவேண்டியதுதான்.

அன்று வீட்டைச் சரியாகக் கூட்டவில்லேஎன்று சின்னம்மாள் லீலாவின் கன்னத்தில் அறைந்தாள். கண்டபடி திட்டினுள். அவள் முகம் வீங்கியது. கண்ணீர் மாலே மாலேயாக வடிந்தது. விம்மி விம்மி அழுது கொண்டே பாடசாலே சென்றுள். தன் தாய் காட்டிய அன்பு அவள்முன் நிற்கிறது. "சிறு பிள்ளேயாய் இருக்கும் போது அம்மா மடியைவிட்டு என்னேக் கீழே இறக்குவதில்லே; முத்தமிட்டுப் பாசமாய் வளர்த்தாள்; தினமும் பாடசாலேக்குப் போகுமுன் தைலம் தேய்த்துக் கூந்தல் பின்னிப் பூவைத்து விடுவாள்; அப்படிப்பட்ட அருமை அம்மா இன்று மறைந்து விட்டாள்; ஆனுல், இப்போது சின்னம்மாளின் அடியும், திட்டும்தான் கண்டபலன்" என்று பலவாறு எண்ணிக் கொண்டே நடந்தாள்.

தாயால் ஊட்டி வளர்க்கப் பட்ட ஓவியப் பிள்ளே லீலா. அன்னேயின் அன்புப் பாலேப் பத்து வயதுவரை பருகியவள். இன்று சிறியதாயோ அன்புக்குப் பதில் துன்பம்; அணேப்பதற்குப் பதில் அடி. இந்த நிலேயில் யாரிடம் அன்பைக் காணலாம் என்று கலங்கிய வண்ணம் பாடசாலேயை அடைந்தாள்லீலா. வகுப்பிலே ஓர் மூலேயில்உட்கார்ந்து தலேயைத்தொங்க விட்டுக்கொண்டு பாடத்தைக் கவனியாது கவலேயில் ஆழ்ந்து இருந்தாள். வகுப்பிலே பாடம் கற்பித்த பிலோமினு சிஸ்றர் இதைக் கவனியாமல் இல்லே. பிள்ளேகள் முன்னிலேயிலே "ஏன் கவலேயாய் இருக்கிறுய்" என்று கேட்கச் சிஸ்றருக்கு விருப்பம் இல்லே. வகுப்பு முடிந்தபின்பே லீலாவிடம் சென்று கன்னம் சற்றே வீங்கிஇருப்பதைக்கண்டு: "என்ன நடந்தது?" என்று கேட்டாள். லீலா உள்ளதைச் சொன்னுள். லீலாவுக்குச் சிஸ்றர் ஆறுதலான மொழிகள் சொல்லி அவளே மடத்திற்கு அழைத்துச் சென்று சாப்பாடு கொடுத்தார். அப்போது இறந்துபோன தன்னுடைய தாயே உயிர்பெற்று வந்தாற்போலக் காட்சியளித்த பிலோமினு சிஸ்றரின் அன்பு மொழிகளேயும், ஆதரவையும் கவனித்து மகிழ்ந்தாள். தாயின் அன்பைத்தேடிய லீலா பிலோமினு சிஸ்றரிடம் அதைக் கண்டடைந்தாள்.

சாயந்தரம் வீடுசென்றதும் அவளால அவ்வன்பை மறக்கமுடியவில்லே. "குடும்பத்தில் இருந்து பிள்ளேகளேப் பெற்றெடுக்கும் தாய்மாருக்கு மட்டுந்தான் தாயன்பு உண்டென்று தவருக அல்லவா எண்ணிவிட்டேன்; ஆனுல். இந்தச் சிஸ்றருக்கு எவ்வளவு அன்பு இருக்கிறது; இந்த அன்பு ஒருசில குழந்தைகளுக்கு மட்டும் காட்டக்கூடிய அன்பல்ல; உலக குழந்தைகளேயே அடக்கக்கூடிய உயரிய தாயன்பு; இந்தக் கன்னியரின் வாழ்க்கையே வாழ்க்கை" என்று எண்ணினுள். பிலோமினு சிஸ்றரின் ஒரு அன்புச் செயல் எவ்வளவுதூரம் லீலாவின் மனதில் பதிந்தது என்றுல், இரு வருடங்களின்பின் கன்னியரின் அன்பு வாழ்க்கையையே பின்பற்றினுள்.

மேரி ஜெயசீலி
கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு.

## கேள்வி

ஆளும் இருபது, அப்பமும் இருபது. ஆண்களுக்கு நன்னாலு; பெண்களுக்கு அரைஅரை; பிள்ளேகட்கு கால்கால். ஆள் எத்தனே? அப்பம் எத்தனே?

விடை :


| | | | |
|---|---|---|---|
| 3 | ஆண்கள் | 12 | அப்பம் |
| 15 | பெண்கள் | $7\frac{1}{2}$ | அப்பம் |
| 2 | பிள்ளேகள் | $\frac{1}{2}$ | அப்பம் |
| 20 | ஆட்கள் | 20 | அப்பம் |

சுபம்!

வே. அல்விறெட்
மட்டுவில் வடக்கு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முக்கண் தாத்தா



**முதலாம்படத்தைப் பாருங்கள் :**

சித்திரக் கலையிலே தாத்தா சிறந்த தேர்ச்சி அடைந்தவர். அதனல் நல்ல அழகான சித்திரம் அல்லது படம் ஒன்றை எங்காவது கண்டாரோ பிறகு என்ன விலை கொடுத்தும் அதனை வாங்கப் பின்னிற்க மாட்டார். அன்று ஒருநாள் பொருட் காட்சி விழா ஒன்றைப் பார்க்கத் தாத்தா போயிருந்தார். அப்பொழுது அங்கே மலரும், சாடியும் கொண்டதாய்த் தான் பிறந்து வளர்ந்து ஒருநாளுமே கண்டு கேட்டிராத அழகான ஒரு படத்தைக் கண்டார். அதைச் சித்திரித்த ஆசாமியின் விரலில் ஓர்தங்க மோதிரம் போட்டாலும் தகும் என்ருர். அதனை எந்தவிதமும் வாங்கத்தான் வேண்டும் என்று திட சங்கல்பம் கொண்டார். உடனே விலைகொடுத்து அதனை வாங்கிக் கொண்டு மிகுந்த குதூகலத்துடன் வீடு சென்ருர். சென்றதும் சூட்டோடு சூடாய் அந்தப் படத்தைச் சுவரிலே மாட்ட வேண்டும் என்று நினைத்துத் தூக்கி வைத்தார் ஏணியை. ஒருகையில் எடுத்தார் ஆணியை. மறுகையால் பிடித்தார் சுத்தியலை. இதோ பாருங்கள்! ஏணியில் நின்று கொண்டு ஆணியைப் பலமாக அறைகிருர் தாத்தா.

**இரண்டாம்படத்தைப் பாருங்கள் :**

தாத்தாவின் அறைக்குப் பக்கத்து அறையிலே கனவான் ஒருவர் வாடகைக்குக் குடி இருந்தார். தாத்தா சுத்தியல் கொண்டு அடித்த உரமான அடியால் ஆணி சுவரையும் துளைத்துக் கொண்டு சென்று அடுத்த அறையிலே ஓர் சுருட்டும் வாயில் புகைத்தபடி உல்லாசமாகப் பத்திரிகை படித்துக் கொண்டு இருந்த அந்தக் கனவானின் பக்கமாக மண்ணையும், மக்கியையும் அள்ளிவீசவே, அவர் என்ன காரியம் என்று பிரமிப்புடன் திரும்பிப் பார்க்கின்ருர்.

**மூன்ரும்படத்தைப் பாருங்கள் :**

சுவரிலே படத்தைத் தொங்க விட்ட தாத்தா சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு சற்றுப் பின்னல் தள்ளி நின்று கொண்டு அந்தப் படத்தின் அழகையும், தான் அதை மாட்டிய திறமையையும் நினைத்து அடக்க முடியாத சந்தோஷம் அடைந்தவராய்ச் சுத்தியலையும் கீழே போட்டு விட்டுக் கைகொட்டி ஆனந்தக் கூத்தாடுகின்ருர்.

**நாலாம்படத்தைப் பாருங்கள் :**

அவ்வாறு கூத்தாடிய போது அடிக்குமேல் அடி பலதரம் அடித்துப் பாடுபட்டுச் சுவரிலே பலமாக அவர் இறக்கிய ஆணி திடீரெனப் பெயர்ந்து அவரது நெற்றியின்மேல் குத்தென்றுபோய் நிற்கவும், தான் ஆசைப்பட்டு வாங்கிச் சுவரில் மாட்டிய படம் அடித்துக் கொண்டு கீழே நிலத்தில் விழவும் கண்டதே தாத்தா திகைத்து மலைத்து நட்ட கல்லைப் போன்று நெட்டுயிர்த்து நிற்கின்ருர். ஆனல், அடுத்த வீட்டில் வசித்த கனவான் ஆத்திரமிகுதியால் அந்த ஆணியை ஒரே தள்ளாய்த் திரும்ப உள்ளே தள்ளிவிட்டார் என்பதைத தாத்தா அறிவாரா? அறிந்தால் சும்மா விடுவாரா?

— வேந்து

## அன்புநிறைந்த வார்த்தை

அர்ச். சுவிசேஷக அருளப்பர் பரதேசியாய் அனுப்பப்பட்டிருந்த பற்மோஸ் தீவிலிருந்து தமது மேற்றிராசனமாகிய எபேசுஸ் நகருக்குத் திரும்பிவந்த போது, தாம் முன்னே மனந்திருப்பியிருந்த ஓர்வாலிபன் கொள்ளைக்காரருடன் சேர்ந்து அவர்களுக்குத் தலைவனுய்ப் போனன் என்று கேள்விப்பட்டார். உடனே அவர் அவர்களுடைய கூடாரம் இருந்த மலைக்குப் போகும்வழியில் காவல்வீரரின் கையில் அகப்பட்டார். அவருடைய வேண்டுதலின்படி அவர்கள் தங்களுடைய தலைவனிடம் அவரைக் கொண்டு போனர்கள். தலைவன் அந்த வயோதிக சுத்தவாளனைக் கண்டதே திடுக்கிட்டு ஓடினன். அருளப்பர் அவனைப் பின்சென்று ஓடி, என்மகனே ஏன் உன் விருத்தாப்பிய பிதாவை விட்டு ஓடுகிருய்? பயப்படாதே; உனக்கு மன்னிப்புத் தேவை; உன் மேல் இரக்கமாய் இருக்கும்படி நானுகத் திவ்வியயேசுவை மன்ருடுவேன் என்று கூறினர். இந்த அன்புநிறைந்த வார்த்தை அவனைச் செயங்கொண்டு அவன் கண்ணீர் சொரியச் செய்தது. அவன் தரித்துநின்று அர்ச். அருளப்பரைத் திரும்பிப் பார்த்தான். பார்க்கவே அவர் அவனை அணுகி அன்பாய் அரவணைத்து முத்தமிட்டுக் கொள்ளைக்காரை விட்டு விலகும்படி செய்தார். அவர் அவனைக் கோபமாய்ப் பேசாமல் அன்பாய் நடத்தியதின் பயனுக அவனை நல்வழிப்படுத்தினர். இப்படியே பெற்ரேரும், பெரியோரும், பிள்ளைகளையும், பிறரையும் அன்பினுலும், தயவினுலும் சீர்ப்படுத்தலாம் அல்லவா?

—எம். ஜே. எம்.

## பொது வர்த்தமானம்

### அமெரிக்க புதியவிமானம்

அமெரிக்காவின் முதலாவது ஜெற் ஆகாயப்பிரயாண விமானமாகிய புதிய போயிங்விமானம் வாஷிங்ரனைச் சேர்ந்த றென்ரன்எனுமிடத்திலே கட்டிமுடிகின்றது. இது பிரித்தானிய "கொமெற் III" எனும் ஆகாயவிமானத்துக்குப் போட்டியாகக் கட்டப்படுகிறது. 1,96,000 றுத்தல நிறை கொண்ட இந்தப்பாரிய நான்குஜெற் போக்குவரத்துவிமானம் 128 அடிநீளமும், சிறகுகள்இரண்டும் ஒரு அந்தத்திலிருந்து மறுஅந்தம்வரை 130 அடி நீளமுமுடையன. இதுமணித்தியாலம் 550 மைல்வேகத்திற் பறந்துசெல்லக் கூடியது. நியூயோக்கிலிருந்து இடையில்எங்காவது தரியாது ஏழுமணித்தியாலத்துக்குக் குறைந்தநேரத்தில் அத்திலாந்திக்சமுத்திரத்தை ஒரேமூச்சில்கடந்து லண்டன்நகர் போய்ச் சேரத்தக்கது. இதிலே 80 முதல் 150 பேர்வரையில் பிரயாணஞ்செய்யலாம்.

### உரிமை பாராட்டுகின்ருர்

தென்னுபிரிக்காவிலே ஜொகானெஸ் பேக்நகரிலிருந்து 20 மைல்தூரத்தில் திரு. சாள்ஸ் பேஜ்எனும்ஒருவர் வசிக்கின்ருர். லண்டன்நகரிலே பிரபுக்களின் விளையாட்டுமைதானம், ஹரோ கலாசாலை, பக்கிங்காம் மாளிகைஉட்படக் குறைந்தபட்சம் 12 கோடியே 90லட்சம்பவுண பெறுமதியானசொத்துக்கள் தனக்கே சொந்தமானவையென்று இவர் உரிமைபாராட்டுகின்ருர். 8-ம் ஹென்றிமன்னனுலே இந்தச்சொத்துகள் வழங்கப்பட்ட காரியாதிகாரியின் அதிகம்நேர்சந்ததியினர் தானேயென்று இவர்சாற்றுகின்ருர். அவற்றிற்குத் தானேமுறையான உரிமைக்காரனென்பதை அத்தாட்சிப்படுத்தும் பழையசமாதிக்கல் ஒன்றையும் இவர் சாட்சியாக எடுத்துக்காட்டுகின்ருர்.

### ஜேர்மன்போலிசரின் ஓட்டம்

இந்தவருடம் பிறந்ததுமுதல் இதுவரையிலே சோவியற்ஆரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலிருந்து ஐஞ்ஞூறுபேருக்கு மேற்பட்ட "மக்கள்ஜனநாயக" பொலிசர்உட்பட இருபதினுயிரவருக்கு அதிகமான கிழக்கு ஜேர்மனியர்கள் மேற்குஜேர்மனியில் போய் அடைக்கலம் புகுந்திருக்கிருர்கள். 1953-ம் ஆண்டிலே முப்பதினுயிரம்பேருக்கு அதிகமான கிழக்குஜேர்மனியர்கள் சுதந்திரஉலகில் அடைக்கலம் புகுந்திருக்கிருர்களென மேற்குபேர்ளின் நகரபரிபாலன அதிகாரிகள் கூறுகிருர்கள். 1949-ம் ஆண்டுமுதல் இதுவரையிலே மேற்குஜேர்மனியில் அடைக்கலம்புகுந்த சோவியற்கிழக்கு ஜேர்மனியர்கள் 12 லட்சம் பேருக்கு மேலாகும்.

### யப்பானியர் கண்டுபிடித்திருக்கிருர்

யப்பானிலே ஒசாக்கா சர்வகலாசாலையின் வைத்தியபகுதியைச்சேர்ந்த புரெபெசர் யோஷிற்ரே நிஷிசாவா அவர்கள் இளம்பிள்ளை வாதத்தைப்பற்றிய ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கையில் தற்செயலாக இரத்தஅமுக்கத்தைச் சிலதினங்களில் குறைத்துவிடக்கூடிய ஓர்புதியமருந்தைக் கண்டுபிடித்திருக்கின்ருர். மேலும் ஆராய்ச்சி நடத்தி வெற்றிகாணுமிடத்து இரத்த அமுக்க நோயாளருக்கு இதுகொண்டு சித்திகரமானசிகிச்சை நடத்தமுடியுமென நம்பப்படுகிறது. தாம்பரிசோதனைநடத்திய நோயாளர்களிலே நூற்றுக்கு 60 முதல் 70 விகிதமானேருக்குக் கணிக்கத்தக்கமுறையிலே இரத்த அமுக்கம் குறைந்திருப்பதாக டக்றர் நிஷிசாவா கூறுகின்ருர்.

### இராசகுடும்பத்தின் சொத்துகள்

முன்னுள்எகிப்திய இராசகுடும்பத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து சொத்துகள், சாமான்கள், ஆபரணங்கள், சித்திரப்பொருட்கள், பணம்என்பனவாய் 7 கோடியே 68லட்சத்து 75ஆயிரம் பவுண பெறுமதியானவைகளைத் தற்போதய எகிப்தியஅரசாங்கம் பறிமுதல்செய்திருக்கிறது. பறூக்மன்னரின் ஆட்சிவீழ்ந்ததும் முன்னுள்எகிப்திய இராசகுடும்பத்தினரின் மாளிகைகள், மற்றும்வாசஸ்தலங்களிலிருந்தே இவைகள் கைப்பற்றப்பட்டன. வறியவர்களின்நன்மைக்கான சமூகசுகாதார கருமங்களுக்கெனக் கைப்பற்றிய பணம் செலவிடப்படவிருக்கிறது. பறிமுதலான ஒருலட்சம் ஏக்கர் நிலம் காணியற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும். மாளிகைகள், மற்றும் வாசஸ்தலங்கள் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகளாகப் பாவிக்கப்படவிருக்கின்றன.

## நாலு சங்கதிகள்

— இந்தமரியாயின் வருடத்திலே ரோமைநகர்வீதிகளின் பக்கமாக அமைந்துள்ள தேவமாதாவின் சுரூபங்களிலே பழுதடைந்தவைகளெல்லாம் பழுதுபார்க்கப்படவிருக்கின்றன. வைகாசியிலே தேவதாயாருக்குத் தோத்திரமாக அந்நகரிலுள்ள சகலதொழிற்சாலைகள், சிற்பசாலைகளிலும் பிரசங்கங்கள் செய்யப்படவிருக்கின்றன.

— சென்வின்சென்ற் டீபோல்சபையை அடியிட்டவரான ஆசா, பிறடெறிக் ஓசானம் அவர்களுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கான விசாரணையை ரோமாபுரியில் தொடங்குதற்கான அங்கீகாரத்தைப் பரிசுத்த பிதா அருளவிருக்கிருரென அச்சபையின் பிரதமதலைவரான திரு. எம். ஜக்குவெஸ் செய்லர் அவர்கள் தெரிவிக்கின்ருர்.

— போர்மோசாதீவிலுள்ள சீனத்தேசியஅரசாங்கத்தின் இரண்டாவது பாராளுமன்றம் சமீபத்தில் கூடிய போது அதன்பிரதிநிதிகளில் 44 கத்தோலிக்கர் இருந்தார்கள். 1947-ம் ஆண்டின் முதலாவது பாராளுமன்றத்தில் 17 கத்தோலிக்கரே இருந்தார்கள்.

— யூகோசிலேவிய சிறைச்சாலைகளிலே தற்போது கத்தோலிக்ககுருமாரும், பிரிவினைச்சபைக்குருமாரும், பாதிரிமாருமாக 158 பேர் சிறைவைக்கப்பட்டிருக்கிருர்கள். இவர்களிலே கத்தோலிக்ககுருமார் 124 பேர், பிரிவினைச்சபைக்குருமார் 32 பேர், பாதிரிமார் இருவர். இவ்வருடத்தில் நான்கு பிரிவினைச்சபைக் குருமாரும், இரு கத்தோலிக்க குருமாரும் சிறைவைக்கப்பட்டிருக்கிருர்கள்.

— பாப்பரசரின் ஸ்தானிகர்கள், பிரதிநிதிகள், அப்போஸ்தலிக்க ஸ்தானுபதிகளாய் உலகமுழுவதிலும் தற்போது ஐம்பதுபேர் இருந்துவருகின்ருர்கள். இவர்களிலே இத்தாலியர் தொகை 35, அமெரிக்கர் 4, ஐரிஷ்காரர் 4, பெல்ஜியர் 2, டச்சுக்காரர் 2, கனடியர் 1, மொனெகாஸ்குவர் 1, சுவிஸ்காரர் 1.

— துருக்கியிலே மத்திய தரைக்கடற்பக்கமாகவுள்ள அடானு எனுமிடத்துக்குச் சமீபமாய் ஆகாயப்பிரயாண விமானம்ஒன்று சென்றஞாயிற்றுக்கிழமை நிலத்தில்விழுந்து மோதியதால் துருக்கிய பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருவர்உட்பட அதிலே சென்ற 23 பேரும் சிவமோசமடைந்தார்கள். அடானு விமானநிலையத்திலிருந்து அதுஉயரஎழுந்ததும் நடுஆகாயத்தில் வெடித்துக் கீழேவிழலாயிற்று.

— இந்தியாவிலே லட்சுமணபுரியிலிருந்து கிழக்கே சுமார் 200 மைல் தூரத்திலுள்ள ஜக்கிலாஸ்ரேஷனிலே பிரயாணிகளின் றெயின்வண்டிஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தாலே 31 பேர் கொல்லப்பட, 35 பேர் காயமடைந்தார்கள். இறந்தவர்களிலே அந்த றெயின்வண்டியில் குண்டுமருந்துகள் கொண்டுபோன ஐந்துபொலிஸ்காரரும் அடங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர்பக்கத் தொடர்ச்சி

## உத்தான சோபனம்

முதல் உத்தானதினம் ஆனந்தமானது. யேசு சிலுவையில் மாணித்திருந்தார். ஆனல், திரும்பவும் உயிர்த்தார். அவர் மிகவும் சந்தோஷமாய் இருந்தார். மற்றவர்களுக்கும் அந்தச் சந்தோஷத்தைக்கொடுக்கவிரும்பினர்.

அன்று காலை எல்லோருக்கும் முதல் அவர் தம்முடைய திருத் தாயாரைச் சந்தித்திருப்பார். ஏனெனில், அவ துக்கம் நிறைந்துபோய் இருந்தது அவருக்குத் தெரியும்.

யேசுவைக் கண்டு தேவதாயார் வெகு சந்தோஷப்பட்டா. அந்தப் பெரிய வெள்ளிக்கிழமை அவவுடைய இருதயம் துக்கத்தால் உடைந்து போயிற்று. ஆனல், இன்று யேசு அவவைச் சந்தோஷப் படுத்தினர்.

அதன்பின் அவர் மரிய மதலேனளைச் சந்தித்தார். வெறுங் கல்லறைக்குக் கிட்ட அவள் அழுது கொண்டு இருக்கக் கண்டார் அவர். மதலேனள் பெரிய பாவியாய்ச் சீவித்தவள். யேசுவைச் சந்தித்தபின் தனது பாவங்களை யிட்டு மிகவும் மனம் நொந்தாள். அவைகளை மன்னிக்கும்படி அவரைக் கேட்க, அவரும் உடனே அவைகளை மன்னித்தார்.

அதன்பின் அவள் பாவஞ் செய்ய விரும்ப வில்லை. யேசுவை மிகவும் நேசித்தவர்களில் அவளும் ஒருத்தியானள். யேசு சிலுவையில் மாணிக்கும் வேளை அவருடைய சிலுவை யடியில் நின்றவர்கள் மூவர். அவர்களில் மதலேனளும் ஒருத்தி.

மதலேனள் கல்லறையருகில் அழுது கொண்டு நின்றதை யேசு கண்டார். அவளைப் போய்ச் சந்தித்தார். முதலில் அவரை யேசு என்று அவள் மட்டிட வில்லை. அவர் "மரியே" என்று கூப்பிட்டார். அவள் உடனே அவரை அறிந்து கொண்டாள். "குருவே" என்று சொல்லி அவர் பாதத்தில் வீழ்ந்தாள். தனது சந்தோஷத்தைத் தெரிவித்தாள்.

— எம். ஜெயம்

## உங்களுக்குச் சமாதானம்

திவ்விய யேசு மாணித்த பின் சீஷர்கள் ஓர்கூடத்தில் இரகசியமாய்க் கூடினர்கள். பயந்து ஒளித்தார்கள், தங்களையும் பிடித்துக் கொல்லுவர்களோ என்று.

சடுதியாய் அவ்விடத்தில் யேசு நின்றர். "உங்களுக்குச் சமாதானம்" என்றர். பின்னர் தம்முடைய கைகளிலும், விலாவிலும் இருந்த காயங்களைக் காட்டினர். அவர்கள்மேல் ஊதி: "இஸ்பிரீத்துவைப் பெற்றுக் கொள்ளுங்கள; நீங்கள் யாருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவைகள் மன்னிக்கப்படும்; யாருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ அவைகள் மன்னியாது விடப்படும்." இப்படிச் சொல்லிப் பாவ மன்னிப்புக் கொடுக்கும் அதிகாரத்தைக் கொடுத்தார்.

சற்றுப்பின்னர் தோமை அப்போஸ்தலர் அங்கு வந்தார். "ஆண்டவரைக் கண்டோம்" என்றனர் சீஷர்கள். தோமஸ் அதை நமபவில்லை. ஆணியின் அடையாளங்களைக் கைகளிற் கண்டு, அவருடைய விலாவிலுள்ள காயத்தையும் கண்டால் ஒழிய நான் விசுவசிக்க மாட்டேன்" என்றர்.

எட்டு நாட்களுக்குப் பின் யேசு திரும்பவும் சீஷருக்குத் தரிசனமானர். தோமாசுக்குத் தம்முடைய காயங்களைக் காட்டினர். அவைகளைக் கண்டு: "என் ஆண்டவரே, என் தேவனே" என்று விசுவாச உச்சாரணம் செய்தார். "என்னைக் கண்ட படியால் விசுவசித்தாய்; ஆனல், காணுமல் விசுவசிக்கிறவர்கள் பாக்கியவாளர்" என்று யேசு சொன்னர்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## மகா ஞானஒடுக்கம்

சலாபநகர் அர்ச். கார்மேல்மாதாவின் ஆசனக்கோவிலிலே சென்ற 19-3-54 முதல் 14-4-54 வரை மரியாயின் யூபிலிவருட மகாஞானஒடுக்கம் ஒன்று வண. நசநாயக, வண. அன்ட்று எனும் குருப்பிரசாதிகளால் போதிக்கப்பட்டது. இந்தஞானஒடுக்க காலத்தில் எமதுவிசாரணைப்பங்கைச்சேர்ந்த கிறீஸ்தவர்கள் அடைந்த ஞான நன்மைகளுக்கோ அளவில்லை. பத்தியருட்சிக்குரிய ஞானமுயற்சிகளினலும், அரிய பிரசங்கங்களினலும் ஆலயமானது ஒருதிருயாத்திரைத் தலம்போலக் காட்சியளித்தது. ஞானஒடுக்கபிரசங்கங்களைக்கேட்டுத் தங்கள்பாவங்களுக்காகப் பசசாத்தாபப்பட்டு மனந்திரும்பியவர்களோ அநேகர். ஞான ஒடுக்ககாலத்திலே ஏறக்குறையப் 15,000 கிறீஸ்தவர்கள் தேவநன்மை பெற்றிருக்கிறர்கள். பங்குனி 28-ந் திகதி "தேவஅழைத்தல் வாரம்" ஆரம்பமானது. இதனைக்கொண்டாடு முகமாகச் சலாபவிசாரணைப்பங்கைச் சேர்ந்த 2,500 பேருக்குஅதிகமான தமிழ், சிங்கள, ஆங்கில மாணவர் மாணவிகளும், ஆசிரியர் ஆசிரியைகளும் சமுகமளித்திருந்தார்கள். இறுதித் தினமன்று பற்பல சபைகளைச் சேர்ந்த சங். சந்நியாசர் கன்னியாஸ்திரிமாரும், வண. குருப்பிரசாதிகளும் சமுகந்தந்து பலஉபந்நியாசங்கள், அரிய பிரசங்கங்கள் நிகழ்த்தினர்கள். கடைசியாக ஆலயமுன்றிலில் தேவநற்கருணை ஆசீர்வாதத்தோடு மகாஞானஒடுக்கம் முடிவெய்தியது. இது அத்துணைசிறப்பாக நடைபெறக் காரணராயிருந்து தொண்டாற்றிய ஆசனக்கோவில் பரிபாலனராம் அதிவண. பீ. சி. பறுநாந்துப்பிள்ளை சுவாமிகள்மேல் திருவருட்பிரசாதங்களை அமலன் நிறைவாகப் பொழிந்தருள்வாராக! —M.V. Perera.

## தேகப்பயிற்சிக் கலைப் போட்டி விழா

நீர்கொழும்புப் பிரிவிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கான தேகப்பயிற்சிக் கலைப்போட்டிவிழாவொன்று முதல் முறையாக 3-4-54 சனிக்கிழமை பிற்பகல் கொழும்பு அதிமேற்றிராசன கத்தோலிக்க பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரரான அதிவண. டி. ஜே. அன்ரனி சுவாமியவர்கள் தலைமையில் மாறிஸ்ரெல்லா கல்லூரி மைதானத்தில், நீர்கொழும்புப்பிரிவுத் தமிழாசிரியர்சங்கத்தாரால் நடாத்தப்பட்டது. போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகட்குச் சுவாமி அவர்களால் வெள்ளிக்கிண்ணங்கள் வெகுமதிகளாக வழங்கப்பட்டன.

ஏழுவயதுக் குட்பட்ட சிறுமிகள் :

1-ம் பரிசு : கடற்கரைத் தெருப் பெண்பாடசாலை.
2-ம் பரிசு : தூவணைக் கலவன் பாடசாலை.
3-ம் பரிசு : முன்னக்கரைக் கலவன்பாடசாலை.


பதினன்கு வயதுக்குட்பட்ட மாணவிகள் :

1-ம் பரிசு : கடற்கரைத் தெருப் பெணபாடசாலை.
2-ம் பரிசு : குடாப்பாட்டுக் கலவன்பாடசாலை.
3-ம் பரிசு : தூவணைக் கலவன் பாடசாலை.

பதினன்குவயதுக் குட்பட்ட மாணவர்கள்.

1-ம் பரிசு : குடாப்பாட்டுக் கலவன் பாடசாலை.
2-ம் பரிசு : தூவணைக் கலவன் பாடசாலை.
3-ம் பரிசு : முன்னக்கரைக் கலவன்பாடசாலை.

ஈற்றில் தலைவர் சுவாமியவர்களின் இனியதமிழ்ச் சொற்பொழிவோடும், காரியதரிசியின் நன்றி யுரையோடும் விழா இனிதுமுடிவுற்றது. —காரியதரிசி




# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனல் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறன். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறுன். ஏதாவது அபாயம் நேருவதானல், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறுன். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்

கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ் :

69, இராணி வீதி — கொழும்பு.

Zeylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo


## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம 30-ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணியளவில் அர்ச். சூசையப்பர்சிற்றலயத்தில் நடந்தேறும். வைகாசி மாதம் பரிபூரணபலன்கள் அடையக்கூடியநாட்கள் :— 5, 17, 18, 19, 20, 21, 27, 30, 31. பொதுப்பாவ மன்னிப்பு அடையக்கூடிய நாட்கள் :— 27-ம் திகதி. கூட்டமுடிவில் ஆலோசனைச்சங்கம் நடைபெறும்.

A. S. FRANCIS OF MARY
for Director

— எலிசபேத் மகாராணியாரும், எடின்பரோ கோமகனும், இவர்கள் பரிவாரமும் பிரயாணஞ் செய்கின்ற 'கோதிக்' என்றகப்பல் 16,000தொன் நிறைகொண்டதாகும். அரசதம்பதிகளின் பிரயாணத்துக்கென்று இது நான்குலட்சம்பவுண் செலவுசெய்து அதற்குவேண்டிய சௌகரியங்களுடன் சிறியதோர் மிதக்கும்மாளிகையாகத் திருத்தியமைக்கப்படலாயிற்று. அவர்களின்பிரயாணத்தால்அதற்கும் போனவிடமெங்கும் பெருமரியாதை நடக்கின்றது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினலும், அர்ச். பாத்திமாமாதா, தெரேசம்மா, அந்தோனியார், ஆரோக்கியநாதா ஆகியவர்களின் மன்றட்டினலும் எனது குழந்தைக்கேற்பட்ட சகலபிணிகளும் நீங்கிவிட்டன. இவர்கள் நாமம் எங்கும், என்றும் போற்றப்படக்கடவன.

சில்லாலை மேரி.

* * *

எனது தகப்பனர் சிலநாட்களுக்கு முன் கடினவியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும்பொழுது நான் சதாசகாயமாதாவை இரந்து மன்றடினேன். அவவுடைய மன்றட்டினல் குணமாகியது. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். பரிசுத்த சதாசகாயமாதாவின் மகிமை எங்கும் புகழப்படுவதாக.

Vavuniya W. L. Costa

* * *

யேசுவின் திருஇரக்கத்தாலும், சதாசகாயமாதாவினதும், அர்ச். நீக்கிலாவு முனீந்திரனுடையவும், ஆரோக்கியநாதருடையவும், நீத்தம்மாளுடையவும் விசேஷமன்றட்டினல் நான்கேட்டமன்றட்டு அனுகூலமானபடியால் அவர்களுடையநாமத்துக்குத் தோத்திரமாக நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

மிருசுவில் ஆர். எல்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 22-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org